**SKY WINGS LTD**
TRAVEL AGENTS
WORLWIDE
24 hour
Ticketing
SriLankan Airlines · ROYAL JORDANIAN
119 Tooting High Street
London SW17 0SY
Tel: 020 8672 9111

VADALEE



# வடலீ

FREE - COMMUNITY PAPER சமூகப் பத்திரிகை JUNE 2007 வடலீ 7 ஓலை 74

SS ESTATE AGENT
Sales - Lettings
Mortgages - Business Loans
Tel: 020 8471 7779
Fax: 0871 522 7277
www.ssestate.co.uk

# சட்டவிரோதமாக வேலை வழங்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானம்!

பிரித்தானியாவில் சட்டவிரோதமான குடிவரவாளர்களை வேலைக்கு அமர்த்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உள்ள நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த வைகாசி மாதம் 15ம்திகதி வர்த்தக ஸ்தாபனங்களுடனான கலந்துரையாடலின் போது உள் நாட்டலுவல்கள் அமைச்சின் சட்டவிரோத வேலையாட்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் முன்னகர்த்தப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தில் ஒருவரை வேலைக்கு அமர்த்துபவர் அவர் சட்டப்படி இங்கு வேலைசெய்ய தகுதியானவர் என்பதையும் அவருக்கு எவ்வித குடிவரவுக் கட்டுப்பாடும் இல்லை என்பதையும் நிச்சயப்படுத்தவேண்டும். இதற்கு உதவும் பொருட்டு படிப்படியான தகவல்களைத் தரக்கூடிய இணையத்தளம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகவல் தளத்தில், புதிதாக வேலைக்கு அமர்த்தப்படுபவர்களை எவ்வாறு சரிபார்க்கவேண்டும், சட்டப்படியான தேவைகள் என்ன.? என்பதுடன் பொதுவாக வேலைக்கு அமர்த்துபவர் மனதில் எழக்கூடிய ஐம்பதுக்கும் மேற்பட்ட கேள்விகளும் அதற்கான மறுமொழிகளும் உள்ளன. அத்துடன் வேலைக்கு அமர்த்துவோருக்கு உதவும் பொருட்டு பிரத்தியேகமாக 0845 010 6677 என்ற தொலைபேசி தொடர்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புதிய நடவடிக்கைகளின் பிரகாரம், மேசடி நோக்குடன் வேலை வழங்குவோர் சிறைத் தண்டனை அல்லது வரையறையற்ற அபராதம் அல்லது இரண்டையும் ஏதிர்நோக்க வேண்டியிருக்கும். வேலை ஆட்களின் விபரங்களை சரி பார்ப்பதில் அலட்சியமாக இருக்கும் ஸ்தாபனங்களுக்கு எதிராக குடியியல் அபராதமும் அறவிடப் படவுள்ளது.

இப் புதிய நடவடிக்கைகள் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைமுறைக்கு வரவிருக்கும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சட்டவிரோத வேலைக் கெதிரான செயற்திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

# இளம் பெண்களின் சிந்தனை உருவாக்கத்திற்கு பெற்றோர்களின் உதவி அவசியமா!

தாயகத்தில் சமூக கட்டமைப்பு இருந்தது. பெற்றோர்களின் கண்காணிப்பு இல்லாவிட்டாலும் கூட, பிள்ளைகள் சமூகக் கட்டமைப்பிற்குள் இருக்கக்கூடிய பண்பாட்டு முறைகளுக்கு ஏற்ப வளரவாய்ப்பு இருந்தது. ஆனால் புலம் பெயர் சூழலில் சமூகம் என்று ஒன்று இல்லை. எல்லோரும் தனியானவர்களே. இந்த நிலையில் நாம் எமது இளையோர்களின் கருத்துருவாக்கத்திற்கு உதவ வேண்டியது இன்னியமையாததாகின்றது.

ஏனென்றால் காலம் வேகமாக மாறிவருகிறது, புதிய ஊடகங்கள் மக்கள் தொடர்பை, மனத் தொடர்பை மிக எளியதாக்கி வருகின்றன. அதேபோல் பல தகவல்களை சிறுவர் முதல் முதியோர் வரை அவர்கள் இருக்கும் இடத்தைத்தேடி வந்து தருகிறது. இதனால் இதற்கு முன்பிருந்த காலங்களை விட இப்போதுள்ளவர்கள் மிகவும் விவரமானவர்களாக இருக்கிறார்கள்.

குறிப்பாக இளம் சிறுவர்களுக்கு தொலைக்காட்சி, கைத்தொலைபேசி முதல் இணையத் தளம் வரை எளிதாக கிடைப்பதால் அவர்கள் பலதுறை வல்லுநர்களாவதற்கான வாய்ப்புகள் அதிகரித்திருக்கிறது. இந்த வாய்ப்புகள் நல்ல விடயத்திற்காக இருக்கும்வரை மகிழ்ச்சிதான். ஆனால் அதுவே விவகாரம் ஆகும்போதுதான் பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரச்சினைகளாக இருக்கிறது.

பெண்களை எடுத்துக்கொண்டால் 12 முதல் 14 வயதுகளில் பருவம் அடைந்து விடுகிறார்கள். பருவம் அடையும்போதே அவர்களுக்கு உடலில் மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்துவிடுகின்றன. பாலியல் கோர்மோன்களின் உற்பத்தி ஆண்களை விட பெண்களுக்கு முன்னதாக உருவாகி அதிகரிப்பதால் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் அவர்களுக்கு பாலுறவு எண்ணங்கள் தலை தூக்க ஆரம்பித்துவிடுகின்றன.

மேலும் பாலினக் கவர்ச்சியும் அதிகரிக்கத் தொடங்குகிறது. இதனால்தான் இப்போதுள்ள இளம்பெண்கள் பலர் ஆண் நண்பர்கள் வைத்துக் கொள்வதைப் பெருமைக்குரிய விடயமாகக் கருத ஆரம்பித்திருக்கிறார்கள். பதினாலு முதல் இருபது வயது வரையுள்ள

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

தரமான தங்கத்திற்கு இண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS
JEWELLERS
276 High Street North, Eastham, London E12 6SA
Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448
தரமான தங்கநகைகளை மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
லக்சுமிஸ் ஜுவலர்ஸ்
தரமான தங்கத்திற்கு இண்டனில் சிறந்த இடம்



Wimbledon Properties
Estate Agents
162 Merton High Street
Wimbledon SW19 1AZ
Looking to
SELL/BUY or RENT/LET
Landlords & Tennants Welcome
Please Call Us
0208-540-4450

Nerojan Silks
ராசியான முகூர்த்த புடவைகளுக்கு சிறந்த இடம்....
நீண்டகால அனுபவம் மிக்க திருமணக் கூறைப் புடவைகள் விற்பனையாளர்
www.nerojansilks.com
திருமணம், பூப்பு நீராட்டுவிழா போன்றவற்றிற்கான Hair Style உங்களுக்கு தேவையான முறையில் செய்து கொள்ளலாம்
FAMOUS FOR Wedding Sarees and Fancy Cotton Sarees, Churidhar Latest Imitation Jewellery
273-275 Ilford Lane, Ilford, Essex IG1 2SD
Tel: 020 8552 5000 Mob: 07950 717 694



கடை விற்பனைக்கு
News, Grocery & Off Licence
Bromley (Kent)
பிரதான வீதியில் மக்கள் நடமாட்டம் நிறைந்த இடத்தில் அமைந்துள்ளது. வியாபாரம் கிழமைக்கு £6000 க்கு மேல்
Bus Pass, Pay Point
Main Road Busy area
Goodwill உண்டு , No Time wasters
Weekly Turnover £6,000 + Bus pass and Newspaper
தொடர்புகளுக்கு-சசி: 07888 822 759

Mortgagelink
The National Mortgage Network
Mob - 07930 626 585
Tel - 020 8946 5566
Nearest Underground :Tooting Broadway - Northern Line

☆ எந்தவிதமான DEPOSIT இல்லாமல் வீடு வாங்கவேண்டுமா?
இலண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் புதிதாக கட்டப்படும் வீடுகள் வாங்க விரும்பினால், 5% DEPOSIT + STAMPDUTY £2000-00 அளவில் வீடுகட்டுபவர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்போம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
YOUR HOME IS AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOANS SECURED ON IT

For News /Articles/ Adverts: 020 8694 7412
PO Box 24783 London SE13 7YE
E-mail: vadalee@lycos.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியச் செய்திகள்

தொகுப்பு - சி.மாசிலாமணி

## சட்ட ஒழுங்கை மீறி ஈட்டிய பணத்தை பறிக்க புதிய ஒழுங்குமுறைகள்

குற்றச்செயல்கள் மூலம் பெறும் பணத்தை சுவீகரிப்பதை எளிதாக்கவதற்கு கடுமையான சட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன என உள்நாட்டு அமைச்சர் வேணன் கோக்கர் அறிவித்துள்ளார்.

காவல் துறையினர் தவறான வழியில் பணம் சம்பாதிக்க அனுமதிக்க மாட்டார்கள் என்பதை உணர்த்தும் விதத்தில் புதிய ஒழுங்குகள் அமையும் என்று உள்நாட்டு அமைச்சர் கூறியுள்ளார்.

2006-ல் ஸ்கொட்லாந்து தவிர உள்ள முழு பிரித்தானியாவிலிருந்தும் ஒழுங்கீனமாக தேடிய 125 மில்லியன் பவுண்கள் சுவீகரிக்கப்பட்டுள்ளது. 2010ல் இதை இரு மடங்காக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது. புதிய முறை அமுலுக்கு வந்தால், குற்றச் செயலுக்கு உபயோகித்த வாகனங்களை சுவீகரிக்கலாம். களவு கொள்ளைக்காகப் பிடிபட்டவர்களின் பெறுமதி மிக்க இரத்திக் கற்கள், பிளாஸ்மா திரை கொண்ட தொலைக்காட்சி சாதனங்கள் போன்றவற்றைச் சுவீகரிக்கலாம். குற்றத்திற்கான தண்டனை வழங்கும்போது அதனால் ஈட்டிய இலாபத்தையும் தண்டனையுடன் சேர்க்கலாம். மோசடியை கவனத்திற்கு கொண்டு வருபவர்களின் வெகுமதிக்காகவும் ஒருபகுதி வருவாய் செலவிடப்படும்.
இந்த சொத்து சுவீகரிப்பு முறை குற்றத் தடுப்பு நடவடிக்கைக்கு ஒரு திருப்பு முனையாகும் என்பதே அமைச்சரின் கருத்து.

## வீடு விஸ்தரிப்பு செய்வதில் உள்ள தடைகள் தளர்த்தப்படவுள்ளது

வீடு விஸ்தரிப்பிற்கு தற்போதுள்ள அனாவசியக் கெடுபிடிகளை தளர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

குறிப்பாக அயலவருக்கு இடஞ்சல் குறைந்த விஸ்தரிப்புகளில் தேவையற்ற கெடுபிடிகள் விலக்கப்படும். அநேகமாக இம்மாத முற்பகுதியில் இது சம்பந்தமாக உரிய அறிவித்தல் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
இப்போது வீட்டின் பரப்பளவை 10 வீதத்திற்கு மேல் விரிவாக்கம் செய்ய விரும்புவர்கள் பணம் செலவு செய்து படம் தயாரித்து மாதக் கணக்கில் அனுமதிக்காக் காத்திருக்கவேண்டி உள்ளது.

இந்த மாற்றம் கொண்டுவரப்பட இருக்கும் அதே நேரத்தில் உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தித் திட்டங்களினால் நகரின் தோற்றம் பாதிப்பு ஏற்படாது தவிர்க்கும் நோக்கில் அதற்கான விதிகள் இறுக்கப்பட உள்ளன.

## அறக்கட்டளை அமைப்புக்களின் நிதி பாதுகாப்பு தொடர்பாக புதிய முயற்சி

அறக்கட்டளை அமைப்புக்களின் நிதி பயங்கரவாதிகளின் துஸ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கப்படவேண்டுமென்பது அரசின் கவனமாக இருந்து வருகிறது. இதனால் அண்மை நாட்களிலிருந்து, இலாபம் நாடாத அமைப்புகளிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும், பயங்கரவாதக் கூட்டத்தினரிடமிருந்து அறக்கட்டளை நிறுவனங்களின் சொத்தை பாதுகாப்பது சம்பந்தமாக ஆலோசனை கோரப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் நோக்கம், பயங்கரவாத அமைப்புகளுக்கு அறக்கட்டளை நிறுவனங்களின் சொத்துக்கள் எளிதில் பெறக்கூடிய ஒன்றல்ல என்ற சூழலை உருவாக்க வேண்டுமென்பதே. இதற்கு அறக் கட்டளை ஆணையத்தை விரிவு படுத்துதல் அறக்கட்டளை அமைப்புக்கள் தங்கள் சொத்துக்களைப் பாதுகாக்க அரசின் உதவியை நாடல் போன்ற அப்பிபராயங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

## அமெரிக்க சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கு சட்டபூர்வ அந்தஸ்தை வழங்கும் சட்டமூலம்

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியிருக்கும் மில்லியன் கணக்கானோருக்கு சட்டபூர்வ அந்தஸ்தை வழங்கும் குடியேற்ற சீர்திருத்த சட்டமூலத்திற்கு அமெரிக்க வெள்ளை மாளிகை மற்றும் செனட் சபை முக்கியஸ்தர்கள் இணக்கம் கண்டுள்ளனர். அமெரிக்காவிலுள்ள சுமார் 12 மில்லியன் சட்டவிரோத குடியேற்றவாசிகளில் பலருக்கு சட்டபூர்வ குடியேற்ற அந்தஸ்தை வழங்கும் இச்சட்டமூலமானது ஜனாதிபதி புஷ் பிரதான சட்ட அமுலாக்க வெற்றியாக அமைகின்றமை குறிப்பிடப்படுகிறது.

## குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களுக்கு அந்தஸ்து கோரி ஊர்வலம்

குடிவரவு அந்தஸ்து இல்லாமல் (சட்ட விரோதமாக) வாழ்ந்து வருகிறவர்களுக்கு ஒரு அந்தஸ்தை அளிக்குமாறு கோரி சென்ற மாதம் 7ம் திகதி இலண்டனில் ஒரு ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.
சீரற்ற கடுமையான காலநிலையையும் பொருட்படுத்தாது எண்ணாயிரத்திற்கும் அதிகமானோர் ஒன்றுகூடி குரல் எழுப்பினர். முக்கிய பேச்சாளர்களின் பேச்சின் சாராம்சமாவது:
இங்கு பணியில் ஈடுபட்டு இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் அரை மில்லியன் மக்களின் உரிமைக்கு உரிய மதிப்பளிக்காது, எந்த வகையான அந்தஸ்த்தும் இன்றி பிடித்து திருப்பி அனுப்பும் அவல நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர். இவர்கள் நேர்மையற்ற சில முதலாளிகளால் சுரண்டப்பட்டு ஊமைகளாய் வாயடைத்த நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.
இந் நாட்டுக்கு அவர்களாற் கிடைக்கும் நலன்களைக் கவனத்திற் கொண்டு, ஒதுக்கி ஓரம்கட்டி இரண்டாம் நிலைக்குத் தள்ளாமல் ஒரு ஒழுங்கின் கீழ் அவர்களைக் கொண்டுவர அறைகூவல் விடப்பட்டது.
32 பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரசாரத்தில் தங்களை இணைத்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வடலியில் வெளிவரும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். வடலி எந்த வகையிலும் பெறுப்பேற்காது. வாசகர்கள் அனுப்பும் ஆக்கங்களை திருத்தியமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

## தஞ்சம் கோருவோர் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டுள்ளது

தஞ்சம் கோரும் விண்ணப்பங்கள் 2007 ஆண்டின் முதற் கால்பகுதியில வீழ்ச்சி கண்டுள்ளதாக, சென்ற மாதம் வெளியிடப் பட்ட உள்நாட்டலுவல்கள் அமைச்சின் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

தஞ்சம் கோரல் உச்சக் கட்டத்தில் இருந்த 2002லும் பார்க்க இப்போது 72 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களில் 5680 பேர் தஞ்சம் கோரியுள்ளார்கள். இலங்கையர் தொகை முன் வரிசைக்குள் அகப்படவில்லை. முதலாம் இடத்தை வகிக்கும் ஆபுகானிஸ்தான் நாட்டவர் 755 பேர் கோரியுள்ளனர்.
திருப்பி அனுப்பப் படுவோர் தொகை கூடுவதற்குப் பதிலாக 4 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. அதற்கான காரணம் நாட்டுக்கு ஆபத்தானவர்கள் என்று கருதபவர்களையும் சிறையில் இருந்த வெளி நாட்டவர்களையும் திருப்பி அனுப்புவதற்கே முன்னுரிமை வழங்கப் படுகிறது. உதாரணமாக சென்ற ஆண்டின் முதற் கால் பகுதிக்குள் திருப்பி அனுப்பப்பட்ட சிறையிலிருந்த வெளிநாட்டவர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டின் முதற் கால் பகுதியில் அத்தொகை இரு மடங்காகியுள்ளது.

புதிதாக ஐரோப்பிய ஒன்றியத்துள் சேர்ந்த பல்கேரிய றூமெனிய நாட்வர்கள் இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களினுள் 7935 பேர் வேலை செய்யச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

## குடிவரவாளர் தொகை கணிப்பில் உள்ளூராட்சி சபைகள் அதிதிருப்தி

தங்கள் பகுதிகளுக்குள் வெளிநாடுகளில் இருந்து இடம்பெயர்த்து குடியேறுபவர்கள் தொகை அரசாங்கத்தினால் சரியான முறையில் கணிக்கப்படாது குறைத்துக் கணிக்கப் படுவதாக உள்ளூர் அதிகார சபைகள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். உள்ளூராட்சி மன்றங்களைப் பொறுத்த வரையில் இது ஒரு பாரதூரமான பிரச்சனை. காரணம் அந்தப் புள்ளி விபரத்தின் அடிப்படையில் தான் அவர்கள் பொதுச் சேவைகளுக்கான நிதி ஒதுக்கப் படுகிறது. புதிய முறையின் கீழ் முழு இலண்டனுக்குமாக திரட்டிய கணிப்பீட்டில் குடிபெயர்ந்து வந்த மக்கள் தொகை 60 ஆயிரம் வரை குறைவாக உள்ளதாம்.

வாரத்திற்கு குறைந்தது 2,000 பேராவது விக்ரோறியா பேரூந்து நிலையம் ஊடாக மற்றைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து உள்ளே வருகிறார்கள். இந்த விபரம் ஒழுங்காகக் கணிக்கப் படுவதில்லை. மூன்றில் இரண்டு இலண்டன் உள்ளூராட்சி சபைகள் இந்த விடயத்தில் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துள்ளன.

## காலில் மின் – காப்பு அணிந்திருந்தும் கைதிகள் குற்றம் இழைக்கின்றனர்

சிறைகளில் இடப் பற்றாக் குறையை சமாளிக்க 1999ல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டத்தின் கீழ், சிறைக் கைதிகளின் தண்டனை முடிவடைய 60 நாட்கள் இருக்கும்போதே அவர்களை வீட்டுக்கு அனுப்பும் ஒழுங்கு நடைமுறையில் உண்டு. இதற்காக அவர்களுக்கு உள்ள நிபந்தனை என்னவென்றால் பிற்பகல் 7 மணியிலிருந்து காலை வரை கட்டாயமாக அவர்கள் வீட்டில் இருக்க வேண்டும். அதாவது அவர்களுக்கு எச்.டி.சி என்னும் வீட்டைவிட்டு வெளியில் போகாமல் இருக்கும் முறை அமுல் படுத்தப்படுகிறது. இம் முறையை அலுவலகத்திலிருந்து கண்காணிக்க வசதியாக அவர்கள் கால்களில் மின் கலன் அடங்கிய கால் காப்பு போடப்பட்டிருக்கும். தண்டனை முடியும் காலம்வரை போடப்பட்டிருக்கும். 60 நாட்களாக இருந்த காலத்தை 2003ல் 135 நாட்களாக உயர்த்தினார்கள்.
ஆரம்பநாட்களில் 40பேரில் ஒருவர்தான் வெளியே விட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மீண்டும் குற்றம் இழைத்தார். ஆனால் அண்மையில் கேள்வி நேரத்தின்போது கொன்சவேற்றிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சப்ஸ் சிறைச்சாலை பற்றாக் குறையைச் சமாளிக்க அனுப்பக் கூடாதவர்களையும் வெளியே அனுப்பி குற்றங்கள் கூடுவதாக அறிவித்துள்ளார். அவர் முறைப்பாட்டிற்கு சாதகமாகவே புள்ளி விபரங்களும் கிடைத்துள்ளது. இத்திட்டத்தின் ஆரம்பத்தைப்போல் இல்லாது இப்போ ஒன்பதில் ஒருவர் குற்றம் இழைக்கிறார். புதிய நிதி அமைச்சின் பேச்சாளர் ஒருவரும், அவர்களை வெளியே விடும் காலம் நீண்டிருப்பதும் இதன் காரணிகளால் ஒன்றென்று கூறியுள்ளார்.

## எச்சரிக்கையுடன் இணையத்தளத்தை பாவிக்க சிறுவர்களுக்கு அறிவுரை

இணையத்தளங்களை உபயோகிக்கும் சிறுவர்கள் தேவையற்ற அனுபவங்களை சந்திக்க நேரிடுகிறது. பகிடி வதை, பாலியற் தொல்லை போன்றவையும் அவற்றுள் அடங்குகின்றன. அதே நேரத்தில் இவ் இணையத் தளங்கள் சிறுவர் தனிமையை போக்கவும் உதவுகிறது. பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்ளவும் உதவுகிறது.
இதன் நிதார்த்தத் தன்மைக் ஒப்ப இதை இனம் கண்டு, சிறுவர்களை பாதுகாப்பான தளங்களை உபயோகிக்க வைப்பதும், அவர்களுக்கு ஏற்படும் தாக்கங்களை வெளியே சொல்ல வைப்பதும் அவசியம் என்று அறக் கட்டளை அமைப்பு ஒன்றின் இணையத் தளம் கூறுகிறது. துஸ்பிரயோகத் திற்கு உள்ளானால் அறிவுரைக்கு 08001111 எண் தொலைபேசியையோ அல்லது www.donthideit.com தளத்தையோ நாடலாம்.

## கடலடி முகடு

புவியின் பாறைக் கோளத்தில் உள்ள கண்டத் தட்டுகள் ஒன்றை விட்டு ஒன்று விலகினால் அதற்குக் கீழே உள்ள ஓட்டிலிருந்து கற்குழம்பு வெளிப்பட்டு "கடலடி முகடு" உண்டாகிறது.
தட்டுகள் நகர்ந்து ஒன்றின் மேல் ஒன்று காணப்பட்டால் "கடலடி அகழ்வெட்டு" (ஓசியானிக் டிரெஞ்ச்) உண்டாகிறது.
தட்டுகள் இணையாக ஆனால் வெவ்வேறு திசையில் நகர்ந்தால் முறிவுப் பகுதி (∴ பிராக்சர் சோன்) உண்டாகும்

## உங்கள் கேள்விகளும் உதவாத பதில்களும்



**அடுத்த மாதத்தில் இருந்து வடலியில் கேள்வி - பதில் பகுதி ஆரம்பமாக உள்ளது. அரசு மீண்டும் உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க உள்ளார்**
**கேள்விகள் அனுப்பவேண்டிய முகவரி :** Arasu, Vadalee. PO Box 24783, London SE13 7YE. **தயவுசெய்து உங்கள் கேள்விகளை 20ம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் படியாக அனுப்பவும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரை நூற்றாண்டுக்கு முன் குடாநாட்டில்!.. - 5

- தி.ச.வரதர்

# வீடும் சூழலும்

**எண்பதாம் ஆண்டிற்கு பின் பிறந்த அனேகருக்கு அதற்கு முற்பட்ட 20 ஆண்டு காலங்களில் தமிழ் பிரதேசங்களில் சமுதாயக் கட்டமைப்புகள், வாழ்வியல்கள் எப்படி இருந்தன என்று தெரிந்துகொள்ள வாய்ப்பு அதிகம் இல்லை.**

**அதேபோல் 1920ம் ஆண்டில் இருந்து 1960ம் ஆண்டு வரையிலான 40 ஆண்டு காலத்தில் தமிழ்பிரதேசங்களில் குறிப்பாக யாழ்குடாவில் சமூக ஈடுபாடு, சமூக கட்டமைப்பு, வாழ்க்கை முறை, வாழ்வாதாரங்கள், போன்றவை எப்படி இருந்தன என்று இப்போது இருக்கும் பலருக்கு தெரியாது.**

**பொதுவாக அறுபது 70களில் இருந்த வாழ்க்கை முறையே தான் அதற்கு முன்பும் இருந்திருக்கும் என்று அவர்கள் என்னுவார்கள். இது இயல்பே. ஆயினும் நிலமைகள் உண்மையில் எப்படி இருந்தன என்பதை ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு.தி.ச.வரதராசன் அவர்களின் நினைவில் மலர்ந்த சில சம்பவங்களின் ஊடாக வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்**

தலைவாசலில் இருக்கும் கட்டிலும், வீட்டுக்குள் இருக்கும் பெட்டகமுந்தான் அன்றைய முக்கியமான பொருட்கள். பெட்டகம் என்பது தடித்த மரப் பலகையினாலான ஒரு பெரிய பெட்டி, வீட்டுக் கதவுக்கு இருப்பதுபோல அதற்கும் ஒரு பெரிய திறப்பு இருக்கும். இந்தப் பெட்டிக்குள்ளேதான். முக்கியமான பணம், நகை, உறுதி முதலியவற்றை வைத்திருப்பார்கள். சில வீடுகளில் இந்தப் பெட்டகம் ஆறு அடி நீளம் இருக்கும். வீட்டுக்காரர் இரவில் அதன் மீதே படுத்துறங்குவார். (காவல்!)

'மாட்டுமால்' என்பது முக்கிய மாடுகள் கட்டுவதற்காக அமைக்கப்பட்டது. பொதுவாக எங்கள் கிராமத்தில் எல்லார் வீடுகளிலும் பசு மாடுகள் இருந்தன. எங்கள் வீட்டில் நான்கு பசுக்களும் இரண்டு கன்றுக்குட்டிகளும் இருந்தன. பசுக்களுக்கு கழுகி, செங்காரி, சுட்டி, சிலம்பி என்று பெயர்களும் உண்டு. காலையில் ஒருவர் வீடு வீடாகச் சென்று மாடுகளைக் கட்டிலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய், பொன்னாலைக் கோவிலின் பின்புறத்தே உள்ள பரந்த புல் வெளியில் மேயவிட்டு, மாலையில் வீடுகளுக்குக் கொண்டு வந்து விடுவார். அதுதான் அவருக்குத் தொழில். மாட்டுச் சொந்தக்காரர் அவருக்குச் சம்பளம் என்று எதுவும் கொடுப்பதில்லை. மாடுகள் காடுகளில் மேயும் போதும் போய் வரும்போதும் போடும் சாணியை அவர் ஒரு கடகத்தில் சேர்த்து காட்டிலேயே குவியல் குவியலாகக் குவித்து வைத்திருப்பார். அவ்வப்போது அவற்றை விற்பதனால் கிடைக்கும் பணமே அவருக்கு ஊதியமாகும்!.

சிறுவயதில் நாங்கள் படிப்பைக் கவனியாமல் எந்த நேரமும் விளையாடித் திரியும்போது எங்கள் பெற்றோர், 'உன்னுடைய தலையில் கடகத்தை வைத்து மாடு மேய்க்கத்தான் விடுவோம்!' என்று ஏசுவது வழக்கம் - அவ்விதம் மிகவும் வருவாய் குறைந்த தொழிலாகவே அது கணிக்கப்பட்டது.

ஒவ்வொரு வீட்டிலும் வைக்கோல், பட்டடையாகக் குவிக்கப்பட்டிருக்கும். காட்டில் மேய்ந்துவிட்டு வந்த மாடுகளுக்கு சிறிது வைக்கோலும் போடப்படும்.

காலையில் எங்கள் தெருவால் நூற்றுக் கணக்கான மாடுகள் ஏதோ ஊர்வலம் போலக் காட்டுக்குச் செல்வதும், மாலையில் அவை திரும்பிக் கூட்டமாக வருவதும் ஒரு கலகலப்பான காட்சி.

மாடுகளுக்குப் புல் செதுக்கி வருவதற்காக, மிக அதிகாலைப் பொழுதில் (விடிவதற்கு முன்) பல ஆண்களும், பெண்களும் கடகமும் உழவாரமும் கொண்டு காட்டுக்குப் போவார்கள். போகும்போது அந்த இருட்டு நேரத்தில், வழக்கமாக புல் செதுக்க வருபவர்களின் வீட்டாரும் வந்ததும் கூப்பிட்டுக்கொண்டு போவார்கள். மார்கழி மாத திருப்பள்ளி எழுச்சியில் பெண்கள் அதிகாலை வேளையில் துயிலெழுப்பும் காட்சி நினைவு வருகிறது.
விடிந்து ஏழுமணிபோல, (வெயில் சுடத் தொடங்குமுன்) கடகம் நிறையப் புல் நிரப்பிக்கொண்டு வீடு திரும்புவார்கள். புல் செதுக்கும் உழவாரத்தை இன்று பலர் அறியாமலிருக்கலாம். ஐந்தாறு அங்குல நீளத்தில் முன்பக்கம் தகடாகக் கூர்மையாகவும், பின்பக்கம் குழாய்போன்ற அமைப்பும் உள்ளதுதான் உழவாரம். அதை ஒரு மரப்பிடியில் இறுக்கிப் புல்லைச் செதுக்குவார்கள். திருநாவுக்கரசு நாயனார் உழவாரத் திருப்பணி செய்தாரென்று படித்திருக்கிறோமல்லவா?

இன்னும் சிறிது காலம் போனால் இந்த உழவாரம், பாக்குவெட்டி, காம்புச்சத்தகம், கொக்கச்சத்தகம், கொடுவாக்கத்தி, உரல், குத்தூசி, வெற்றிலைத் தட்டம், மற்றும் உமல், திருவணை, உறி, பட்டை, தட்டுவம் இப்படிப் பலபொருட்களை நூதனசாலையில்தான் பார்க்க வேண்டிவரும் போலிருக்கிறது!.

எல்லா வீடுகளிலும் பசுக்கள் இருந்தன. எல்லா வீடுகளிலும் பால் இருக்கும். நாங்கள் இப்போது இந்த நகரத்தில் பால்காரரிடம் வாங்கும் பொருளுக்கும் 'பால்' என்றுதான் பெயர். ஆனால் அந்தக் காலத்தில் பொன்னலைக் காடுகளில் பசும்புல் மேய்ந்துவிட்டு வந்த பசுக்கள் கொடுத்தால்தான் உண்மையான பால்! அதற்கென்று ஒரு மணம். அதற்கென்று ஒரு ருசி - அந்த மாதிரிப் பாலை இனிக் காண்போமென்று தோன்றவில்லை.

அப்போது பாலை யாரும் விற்கமாட்டார்கள். எப்போதாவது யாருக்காவது பால் தேவைப்பட்டு பால் கொடுத்தால் அதற்குப் பணம் வாங்கமாட்டார்கள். பால் மோர் விலைக்கு விற்க கூடாதென்று சொல்வார்கள்.

எல்லா வீடுகளிலும் கோயிலுக்கென்று கொஞ்சம் பால் தினசரி கொடுப்பார்கள். காலை வேளைகளில் வீட்டுக்கு வீடு பால்காவடி தூக்கிச் சென்று பால் சேகரித்துக் கொண்டு போய் கோயிலுக்குக் கொடுப்பதையே ஒருவர் தொண்டாகக் கொண்டிருந்தார்.

வீடுகளில் பால், மோரை புனிதமாக உபயோகிப்பார்கள். பால், மோர் வழங்கும் பாத்திரங்களை (மண் பாத்திரங்கள்தான்) மற்றைய சமையல் பாத்திரங்களுடன் கலக்காமல் தனியாக வைத்திருப்பார்கள். அதனால் எவ்வளவு சுத்த ஆசாரமுள்ளவர்களும், பால், மோரை எந்த வீட்டிலும் வாங்கிப் பருகுவார்கள்.

வீட்டில் உபயோகிக்கும் பாத்திரங்கள் எல்லாமே பொதுவாக மண் பாத்திரங்கள்தான். மிகச் சிலரிடம் மட்டும் பித்தளை வெண்கலப் பாத்திரங்கள் சில இருந்தன. (இப்போது வீடுகளில் நிறைந்திருக்கும் 'எவர் சில்வர்' பாத்திரங்கள் மிகச் சமீபத்திய வரவு)

சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் வீட்டிலிருந்த மாட்டுமால் இதோ என் கண்முன்னே தெரிகிறது!

பெரிய மால் அது. நாலு 'மொக்கு' மரத் தூண்களில் வலை வைத்து மேலே பனை ஓலையால் வேயப்பட்டிருந்தது. அதன் ஒரு பக்கத்தில் நிலத்திலே கட்டைகள் அறைந்து அவற்றில் பசுக்கள் கட்டப்பட்டிருக்கும். அவைகளைக்கட்டிய பனைநார்க்கயிறு நுனியிலே 'கண்ணி' வைத்துச் செய்யப் பட்டிருக்கும். மாடுகளின் கால்களிலே இந்தக் கண்ணிகளைப் பிணைப்பதும், தேவையான போது கழற்றி விடுவதும் மிக இலகுவாக இருக்கும்.

மாலின் இன்னொரு பக்கத்தில் விறகுகள் குவிக்கப்பட்டிருக்கும். வளையிலிருந்து ஒரு 'அசைவு' கட்டி அதில் கருக்கு மட்டைகள் அடுக்கியிருக்கும். பக்கத்தில் கங்கு மட்டை, கொக்கரை, பன்னாடை முதலியவை குவிக்கப்பட்டிருக்கும் - எல்லாம் பனையிலிருந்து பெறப்பட்டவையே!.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# புதிய பெயரில் உள்நாட்டு அலுவலகம்

வளைந்து கொடுக்கும் தன்மையுடன், பொது மக்கள் பாதுகாப்பை திடப்படுத்தல். எதிர்காலத்திற்கு பாதுகாப்பளித்தல் ஆகிவற்றை கவனத்திற்கு கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் மீளமைப்புப் பெற்ற புதிய உள்நாட்டு அலுவலகம் சென்றமாதம் 9ம் திகதி திறக்கப் பட்டுள்ளது.

இத் திணைக்கள மாற்றங்களை வரவேற்றுப் பேசிய உள்நாட்டுச் செயலாளர் கலாநிதி ஜோன் றீட் அவர்கள் உலகமும் மாறாதிருப்பதில்லை அதுபோல் நாமும் நிலையாக இருப்பதில்லை. அதனால்தான் பொது மக்களுக்கு அதிக சம்பந்தமுள்ள குற்றவியல், குடிவரவு, பயங்கரவாதம் ஆகியவை சம்பந்தப்பட்ட உள்நாட்டு அலுவலகத்தை மறு சீரமைப்பு செய்துள்ளதாகக் கூறினார். அவர் மேலும் கூறுகையில்

குற்றவியல், பயங்கரவாதம், எல்லைப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு எதிரான செயற்பாடுகளில் தனிச் சிறப்புடன் இயங்க ஏதுவாக தன் கவனத்தை மக்கள் பாதுகாப்பு உணர்வு பெற உதவுதல், அவர்களுக்கு பாதுகாப்பது வழங்கல், வன்முறை, போதை, மதுபானம் போன்றவை ஏற்படுத்தும் குற்றவியலைக் குறைப்பது, தேவையின் போது, வெளிப்படையானதும் கணக்குக்கு அடங்கியதுமான காவல் சேவையை ஊக்குவிப்பது, குடிவரவுச் சட்டங்களுக்கு அமைய எல்லைகளைப் பலப்படுத்துவது, தஞ்சமுடிவுகளை விரைவுபடுத்துவது ஆகியற்றை முறையாகச் செயற்பட வைத்து பிரித்தானியாவின் பொருளாதாரத்தை உயரச் வைப்பதிலும் அவர்களது குடியுரிமைச் சலகைகளைப் பாதுகாப்பதிலும் தன் கவனத்தைச் செலுத்தும். எல்லைக்கும் குடிவரவுக்கும் ஆன முகவர் மையம் என்ற புதிய பெயரும் உள்நாட்டு அலுவலகம் பெற்றுள்ளது. கடந்த பத்தாண்டு காலத்தில் இங்கே இருக்க தகுதியற்றவர்களை வெளியேற்றுவது போன்றவற்றின் வெற்றி அத்திவாரத்திலிருந்தே இது தன்னைக் கட்டி எழுப்பப்போகிறது. அடையாள அட்டையை மையமாக வைத்தே சட்ட விரோதக் குடியேற்றம், திட்டமிட்ட குற்றச் செயல், சர்வதேசப் பயங்கரவாதம் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பிக்கின்றது. குற்றவியலிலிருந்தும் சமூக விரோத நடவடிக்கைகளிலிருந்தும் மக்களைப் பாதுகாக்கும் அதன் பணியும் தொடரும். சிறப்பாகச் சொல்வதென்றால் நாட்டின் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிராகப் போராடுவதில் தனிச் சிறப்புக் கொண்ட பாதுகாப்பும் பயங்கரவாத எதிர்ப்பும் என்ற அலுவலகமும் இந்தப் புதிய மையத்துடனேயே சேர்க்கப் பட்டுள்ளது. உள்நாட்டுச் செயலகம் முழுக் கவனத்தையும் இப்போது மக்களைப் பாதுகாக்கும் தனது முக்கிய பணிக்கு ஒதுக்கும். இவ்வாறு உள்நாட்டுச் செயலாளர் கூறினார்.

புதிய நீதி அமைச்சு அங்குரார்பணம்

குற்றவியற் சட்டத்தினுள் அடங்கிய தண்டனையைக் குறைப்பது, மறு தண்டனை வழங்குவது ஆகிய பொறுப்புக்களும் சிறைத் திணைக்களமும் குற்றவாளிகள் கண்காணிப்பு திணைக் காலமும் சென்ற மாதம் 9ம் திகதி அங்குரார்பணம் செய்த புதிய நீதி அமைச்சின் பொறுப்பில் விடப்படுகின்றன. இதுவரை காலமும் இவை உள்நாட்டு அலுவலகத்தின் பொறுப்பில் இருந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு - சி.மா

**Croydon Tutorial College**

**A CENTRE OF ACADEMIC EXCELLENCE**

30-32 Southend, South Croydon, Surrey, CR0 1DN

Tel:020 8688 5777 Tel/Fax: 020 8688 5776

Email: admin@croydontutorialcentre.co.uk

**Disappointing Results???**

*Enrol now for GCSE, GCE AS and A2*

*FULL TIME CLASSES*

**For January2008/June2007/8Examinations**

Coaching by experienced tutors

Official Examination Centre for all UK's leading Exam Boards

☆ Official Examination Centre for all UK's leading Exam Boards For Jan '07/'08, June '07/'08 Examinations. Coaching by experienced tutors.

☆ Starting Professional Courses in Accoutancy in February 2007
EVENING / WEEKEND Classes

☆ ACCA, CIMA, CAT, AAT, Book Keeping (Pitmans), Computerised Accounting (sage line 50 )

*Press fast forward to reach your potential*

**Visit our website - www.croydontutorialcollege.co.uk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடலி

தொலைபேசி:
020 8694 7412

தொலைநகல்:
020 8694 7412

விளம்பரம்:
07843 895 048

மின்னஞ்சல்:
Vadalee@lycos.co.uk

இணையம்:
www.vadalee.com

முகவரி:
VADALEE
PO BOX - 24783
LONDON
SE13 7YE

இப் பத்திரிகையை மாதம் தோறும் தபாலில் பெறுவதற்கு ஓர் ஆண்டு சந்தா 7.00 பவுண்கள். ஐரோப்பாவுக்கு 25 யூறோக்கள்

Cheque or Postal order
Payable to: VADALEE


# தேய்மான மூட்டு அழற்சி

எலும்பு மூட்டுக்கள் சீரான வகையில் அசையாது விட்டால் வாழ்வின் அசைவு அர்த்தமற்றதாகி விடும். மூட்டுக்களின் அசைவே வாழ்க்கை. நல்ல நிலையில் உடல் இருக்கும்போது, மூட்டுத் தேய்வு பற்றி நாம் கவலைப்படுவது இல்லை. ஆனால் மூட்டின் தேய்வுநிலை காரணமாக, அசைவை சீராக்கும் மூட்டுக் கசியிளையம், மூட்டெண்ணெய், மூட்டுச் சவ்வு, மூட்டுறை, தசைகள், தசைநார்கள் ஆகிய அனைத்தும் பாதிக்கப் பட்டு. தேய்வுநிலை மூட்டின் முழு அசைவையுமே கட்டுப்படுத்தும் போதுதான் மூட்டுத் தேய்மானம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுகிறது.



மூட்டுத் தேய்மானம் என்பது மூட்டு அசைவின்போது எலும்புகள் நேரடியாக ஒன்றுடன் ஒன்று உரசாமல் பாதுகாப்பளிக்கும் குருத்தெலும்புகள் மீள்நிறைவெய்தும் அளவிலும் அவற்றின் அழிவு கூடும்போது ஏற்படும் ஒரு நிலையால் வரும் அழற்சி ஆகும். பொதுவாக 50 அகவை தாண்டியபின் எற்படும் நோய். ஆனாலும் 30 அகவையில் இதனாற் பாதிக்கப் பட்டவர்களும் உண்டு. 80 வயதில்கூட இதுபற்றி வாய் திறக்கத் தேவையில்லாதவர்களும் இருக்கிறார்கள்

மூட்டு அழற்சியால் பெற்ற நான் பெற்ற துயர்களை குறைப்பதற்கு மருத்துவர்கள் காட்டிய வழியை பகிர்ந்து கொள்ளும் நோக்கிலேயே இங்கே தரப்படுகிறது. எனக்கு என் முழங்கால் மூட்டில் அழற்சி ஏற்பட்டது. இடுப்பு, தோள்மூட்டு, முழங்கை மூட்டு, கழுத்தினதும் அடி முதுகினதும் முள்ளெலும்பு மூட்டு ஆகியவற்றின் அழற்சியாற் பாதிக்கப்பட்டு பல நாட்கள் மருத்துவ மனையில் இருந்தவர்களையும் மூட்டு அழற்சியின் இன்னுமொரு வகையான கொடூரம் மிக்க “றூமற்ரோயிட் ஆர்த்றைரஸ்” என்னும் ஊதைசார் மூட்டழற்சியால் பாதிக்கப் பட்டவர்களையும் பார்த்திருக்கின்றேன். அவர்கள் சிரமத்தை அப்போது என்னால் உணர முடியவில்லை. பட்டால்தானே தெரிகின்றது.

எம் மண்டை ஓட்டின் 6 எலும்புகளில் இருந்து பாதம் வரையுள்ள 206 எலும்புகளும் மூட்டுகளினாற் பிணைக்கப் பட்டு உடலின் அசைவுக்கு ஆதாரமாகவும் அதன் பாதுகாப்புக்கு அரண் ஆகவும் உள்ளன. தேய்மான மூட்டழற்சியை (Osteo Arthritis) விட, ஊதைசார் மூட்டழற்சி (Rheumatoid Arthritis) கொடூரம் மிக்கது. அது எம் உடலின் பல மூட்டுக்களை ஒரே நேரத்தில் பாதிக்க வல்லது. நான் குறிப்பிடுவது மூட்டுத் தேய்மான அழற்சி பற்றியதே. தேய்மான அழற்சி உள்ளவர்கள் அவர்களின் பாதிப்புக்கு உள்ளான மூட்டுக்களுக்கு அதிக வேலை கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். உதாரணமாக முழங்கால் மூட்டில் அழற்சி உடையவர்கள் அதிக தூர நடைகளைக் குறைக்க வேண்டும். படி ஏறுவதைக் குறைக்க வேண்டும். பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய மூட்டுகளுக்கு அதிக வேலை கொடுக்கும் அப்பியாசங்களை குறைக்க வேண்டும். மூட்டுகளில் ஏற்படும் சிறு காயங்களைக்கூட அலட்சியப் படுத்தக் கூடாது. “நோயின் தந்தை யாராக இருந்தாலும் அதன் தாய் சீரற்ற உணவுதான்” என்கிறது ஒரு சீனப் பழமொழி. மூட்டுக்களுக்கு தேவைப்படும் சத்துக்கள் உணவுகளுடன் சேருவதை கவனத்தில் கொள்ள வேண்டும். சீரான உணவு முக்கியம். கறியுப்பை அதிகம் எடுத்து சோடியத்தின் அளவைக் கூட்டுவதால் எலும்பிற்குத் தேவையான கல்சியம் உட்செல்வதில் தடங்கல் ஏற்படுகிறது. தேய்மான அழற்சியை முழுமையாகத் தவிர்த்தல் சாத்தியப் படாவிட்டாலும் தள்ளிப்போட முயற்சிப்பதில் தவறில்லை அல்லவா.

நோய்க்கான காரணியாக மரபு, பரம்பரை ஆகியவற்றின் தொடர்புகள் பற்றி ஆய்வுகள் செய்கிறார்கள். மரபு ஆய்வில் ஓரளவு முன்னேற்றமும் கண்டுள்ளார்கள். எப்போதுமே இந்நோயின் சிகிச்சைக்கு மருத்துவ ஆலோசனை முக்கியம். பழங்களை குறிப்பாக அன்னாசிப் பழத்தை மூட்டு அழற்சி நோய்க்கு சிறந்த உணவாகச் சொல்லுவார்கள். ஆயிலும் உணவை தீர்மானிப்பதில் மருத்துவரின் ஆலோசனை அவசியம். இந் நோய்க்கு உடற் பயிற்சியும் தேவை. அதுவும் தகைமை பெற்றவரின் ஆலோசனைக்கு அமையவே செய்யப்பட வேண்டும்.

இன்று இத்துறை இயன்முறைப் பயிற்சி, குணமாக்கும் மருந்து, அறுவைச் சிகிச்சை ஆகியவற்றில் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. இளம்பிள்ளை வாதம் போன்றவற்றால் எற்படும் ஊனங்களையும், வளர்ச்சிக் கோளாறினால் எற்படும் குட்டை, நெட்டை, கோணல் போன்றவற்றையும்கூட நீக்கு கிறார்கள். ஆனாலும் எக் காரணத்தைக் கொண்டும் இத்துறையில் தகைமை இல்லாதோரை நாடவும் கூடாது ஆலோசனை பெறவும் கூடாது.

சி.மா


# Life in the UK பரீட்சை உதவி வகுப்புகள் - Lewisham

- யூலை 2ம் திகதிக்கு பின் பரீட்சை எழுதுகிறவர்கள் புதிய முறையில் மட்டுமே பரீட்சை எழுதலாம்.
- புதிய புத்தகத்தில் அத்தியாயங்கள் 2. 3. 4. 5. 6. ஆகியவை படிக்கவேண்டும்.
- தற்சமயம் இரு முறைகளிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன.
- யூலை 2ம் திகதியை வாய்ப்பாக கருதி பழைய முறையில் பரீட்சை எழுதவிரும்புகிறவர்களுக்கு துரித மீட்டல் (Revision) வகுப்புகளும், பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.
- ஏற்கனவே படித்துக்கொண்டிருப்பவர்கள் அவரவர் தேவைக்கு ஏற்ப மீட்டல் வகுப்புகளை ஒழுங்குசெய்து கொள்ளலாம்.
- பரீட்சைக்குரிய பாடத்திட்டம் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தெளிவுபடுத்தப்பட்டு பரீட்சைக்கு உதவி வழங்கப்படுகிறது.
- ஒவ்வொருவருடைய கற்றல் திறமைகளும் வேறுபடுவதால் அவரவர் அற்றலுக்கு ஏற்ப வகுப்புகள் நடைபெறுகின்றன.
- உங்களுக்கு ஏற்ற நேரத்தை கலந்துபேசி பதிவுசெய்துகொள்ளலாம்.
- ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் அதன்பின் இறுதியிலும் கணனி மூலம் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் கணனியில் மாதிரி பரீட்சைகளும் நடத்தப்படுகின்றன.




**தனி வகுப்புகளும் கூட்டு வகுப்புகளும் (ஆகக்கூடியது 3 பேர் வரை) நடைபெறுகின்றன**

**தொடர்புகளுக்கு: பிரபா, Tel: 07749 051 394**

BUS — Lewisham Station இல் இருந்து ஏறத்தாள 5 அல்லது 10 நிமிட நடை தூரத்தில் இரு வெவ்வேறு இடங்களில் நடைபெறுகிறது.
பஸ் எண்கள் 21, 36, 47, 54, 75, 89, 108, 122, 136, 180, 181, 185, 199, 208, 261, 273, 278, 284, 321, 436, 380, 484, P4, 621 [From 484 – 2 Mins walk]

DLR — லூாசியத்திற்கு வருவதற்கு சராசரி பயணநேரம்
Canary Wharf -15mins, Bank 27mins, Stratford - 28mins

TRAIN — LEWISHAM / LADYWELL
4TH Station from Charing Cross, 2nd Station from London Bridge


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித இயந்திரம்

**ஏ.ஜே.ஞானேந்திரன், பாசல் சுவிஸ்**

மனிதன் பராக்கிரமசாலிதான். நல்ல உடற்கட்டும், தோள் பலமும் இருந்துவிட்டால் போதும். வானத்தை வில்லாய் வளைப்பேன், என் காலில் போட்டு மிதிப்பேன் என்றெல்லாம் வீராவேசமான வார்த்தைகள் மனிதனிடமிருந்து அருவிபோல் கொட்டுகின்றன. உற்சாகம் கரைபுரண்டோடினால், அவனையறியாமல் உரத்து பாடுகின்றான். எதிர்த்தாற்போல் வருபவரை , எலும்புகளை நொருக்கி விடுவது போல ஆரத்தழுவி அணைக்கின்றான். இதே மனிதனுக்கு, உடம்பில் ஒரு கோளாறு என்று வந்துவிட்டால், கோலமே அடியோடு மாறிவிடுகின்றது. அவனது வழமையான கலகலப்பான சுபாவங்கள் எல்லாம், ஒரு கும்பிடுபோட்டுவிட்டு ஓடிப்போய்விடுகின்றன. ஆடிப் போய் விடுகின்றான் மனிதன். சில நிஜங்களைச் சந்திக்கும்போதுதான், வாழ்வின் யதார்த்தங்கள் அவனுக்கு வெளிப்படையாகத் தெரிகின்றன.

அவர் ஒரு பிரெஞ் நாட்டவர். வயது அதிகமில்லை. முப்பதை எட்டிப் பிடித்த இளைஞன். படு உற்சாகமான பேர்வழி. இளம் வயதாக இருந்தாலும், நிறைய வாசிக்கும் பழக்கம் இருப்பதோடு, ஊர் உலக நடப்புகளை பிட்டுப் பிட்டுச் சொல்வதில் சூரர். இசையில் நிறைய நாட்டமுண்டு.ஒரு கைதேர்ந்த சமையற்காரரும் கூட. பலங்கள் இருக்கும் இடத்தில், மெல்லப் பலவீனங்களும் குடியமர்ந்து கொள்வதுண்டல்லவா? திருமணமாகி, ஒரு பிள்ளைக்கு தந்தையென்றாலும், பெண்கள் விடயத்தில் சபலக்காரன். நான் ஒரு பெரிய ரசிகன் என்று அடிக்கடி சொல்லிக் கொள்வார். பேச்சளவில் தான் இப்படி ஜாலியாக இருக்கின்றேன். ஆனால் நான் ஏகபத்தினி விரதத்தை அனுஷ்டிப்பவன் என்று அவர் சொல்வதும் உண்மை என்றே நினைக்கின்றேன். என்றாலும் செல்லமாக இவருக்கு நான் சூட்டிய பெயர் விளையாட்டுப்பிள்ளை.

இவர் வேலை செய்யும் இடத்தில், கலகலப்பிற்கு எப்பொழுதுமே பஞ்சம் இருப்பதில்லை. வெங்காயத்தை நறுக்கும் போது, ஒரு புதிய தாளத்தை உருவாக்கியபடி, தன் பணியைத் தொடருவார். கையில் ஏதோ ஒரு பொருளை வைத்துக் கொண்டு, ஏதாவது ஒரு பிரபல்யத்தை, இவர் அபிநயித்துக் காட்டுவதில், படு கில்லாடி. இந்த உற்சாகப் பேர்வழி, ஒரு நாள் காலை வேலைக்கு வந்தபோது, நான் அதிர்ந்து போனேன். காலை வணக்கம் சொன்னார். அவ்வளவுதான். அதிகம் பேசவில்லை அன்று. எதையோ பறிகொடுத்தவர் போல முகபாவம். விசாரித்ததில் உடம்பு நன்றாக இல்லையாம். எப்படி இருந்தவர், எப்படியாகிப் போனார்? அன்று முழுவதும், நடைப்பிணமாக, நடமாடியவர், நேரத்தோடு, வீடு சென்று விட்டார். இந்த நோய் என்பது, மனிதனை எந்த அளவுக்கு ஆக்ரமித்து, ஆட்டிப் படைக்கின்றது என்பது அன்று கண்கூடாகத் தெரிந்தது. நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம் என்கிறார்களே. உண்மைதான்.

மனிதன் நோயாளியாகி விட்டால், நடை பிணமாகி விடுகின்றானே? அதன் பின்பு அவனால் எதையும், வழமைபோல, ஒழுங்காகச் செய்ய முடியாத நிலை வந்து சேர்ந்து விடுகின்றது. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பார்கள். நோயாளியின் வேதனை மற்றையோர்க்கு தெரிவதில்லை. ஒன்று மட்டும் நிதர்சனமாகத் தெரிந்தது. இந்த மனித உடலும் ஓர் இயந்திரந்தான். ஏதாவது ஓர் உறுப்பு பழுதடைந்து விட்டால் அல்லது தேய்மானம் கண்டுவிட்டால், வாழ்க்கை ஒரே கயிறுழுப்பாகி விடுகின்றது. பலவற்றோடு போராட வேண்டிய, நிலை வந்து சேர்ந்து விடுகின்றது. நவீன உலகின் கணனியை நினைத்துக் கொண்டேன். சொல்வதெல்லாம் செய்யும் இந்தக் கணனி என்பது அதிஅற்புதமான ஓர் இயந்திரந்தான். ஒத்துக் கொள்கின்றேன். ஆனால் அது எங்கோ கோளாறு என்று அறிவித்துக் கொண்டு, இயங்க மறுக்கும்போது, உலகமே அஸ்தமித்து விடுகின்றதே. மனித இயந்திரம் அறிமுகம் செய்த இன்னொரு இயந்திரந்தானே இது?

**SRI RAGHAVENDRA ASTROLOGICAL CENTRE**

A unique Opportunity to know the Past, Present & Future of your life regarding Health, education, marriage, job, financial aspects, love affairs, business , courts, martimonial travel etc. by face , palmistry, horoscopes, numerology, date of birth, vasthu. The sutable lucky stones & lucky numbers will be predicted in Tamil, English Hindi and major Indian languages. (Log in to www.maheshastro.com)



**உங்கள் கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களைக்கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்: கணவன் மனைவி ஒற்றுமை, திருமணயோகம், வாஸ்த்து சாஸ்த்திரம், தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயம், குடும்பப் பிரச்சினை, கல்வி, கோட் வழக்குகள், அதிஸ்டக்கற்கள் திருமணப்பொருத்தம், வாகனப் பொருத்தம் பிறந்த பிள்ளைகளின் ஜாதகம், கணித்துக் கொடுக்கப்படும். தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும்.**

**Contact: Mahesh Raghavendra**
**NEW SHANKER SUPERSTORE**
**231 233 NORTHOLT ROAD , SOUTH HARROW, HA2 8HN**
**(NEAR SOUTH HARROW TUBE STATION)**
**10.00AM - 8.00PM (SEVEN DAYS A WEEK)**
**Contact Mobile: 07946 188 519**




**Name :** Mathuram TV, Tharisanam TV
**Satellite:** Eutelsat Hotbird (13 degree East)
**Frequency:** Vertical
**Polarization:** 11.470
**Symbol Rate:** 27.500
**Fec:** 5/6
**Telecasting system:** Digital free-TV

# பின்தள்ளப்படும் ஆங்கிலம்

ஒரு காலத்தில், அந்நிய நாடுகளில், தமது மொழியை ஆங்கிலேயர்கள் பரப்பி, அதில் பெருமளவு வெற்றியும் கண்டார்கள் அல்லவா? இப்பொழுது கதை புதிய கோணத்தில் திரும்பியிருக்கின்றது. இங்கிலாந்திலுள்ள பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளில் ஆங்கிலத்தை முதற்பாடமாகக் கொண்டிராதவர்களின் தொகை மளமளவென்று ஏறிவருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. ஆரம்பப் பாடசாலைகளில் கற்பவர்களில் ஏழு பேரில் ஒருவரும், இடைநிலைப் பாடசாலைகளில் பத்தில் ஒருவரும், வீட்டில், ஆங்கிலம் அல்லாத ஒரு மொழியை உரையாடல் மொழியாகக் கொண்டுள்ளார்களாம். ஆண்டுக்கு ஆண்டுக்கு அரசு பாடசாலைகள் பற்றி எடுக்கும் புள்ளிவிபரங்களில் இருந்தே இத் தகவல் பெறப்பட்டுள்ளது. ஆரம்பப் பாடசாலைகளில் கற்பவர்களில் 21.9 வீதமானவர்கள் வந்தேறு குடிகளாக இருக்கின்றார்கள் என்று இந்த அறிக்கை கூறுகின்றது. (கடந்த வருடம் 20.6 வீதம்). இடைநிலைப் பாடசாலைகளில் 16.8 வீதம் 17.7 வீதமாக உயர்ந்துள்ளது. ஆரம்பப் பாடசாலைகளில் 2006ம் ஆண்டின்போது ஆங்கிலத்தை முதன் மொழியாக பேச்சு மொழியாகக் கொண்டிராதவர்கள் தொகை, 7 வீத அதிகரிப்பால், 448,000 ஆகியுள்ளது. இடைநிலைப்பள்ளிகளில், 9 வீத அதிகரிப்பால் இத்தொகை 342,000 ஆகியுள்ளதாம்.

அடுத்த வருடம் கதை எப்படி இருக்கப் போகின்றது?

**தமிழ் ஓலைகள் 2007**

**Tamil Pages**

ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் இருக்கவேண்டிய
தனித்தும் வாய்ந்த தகவல் ஏடு

அதிக தகவல்களுடன் 14ம் பதிப்பு வெளியாகிவிட்டது

ஆலயங்கள், தமிழ் கடைகள் மற்றும் தமிழ் நிறுவனங்களிலும் இலவசமாகக் கிடைக்கும். தபாலில் பெற விரும்புவோர் £2.00 அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். விபரங்களுக்கு

52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF
Tel: 020 8543 2126, 020 8942 8745, Fax: 020 8540 3442
Mobile: 0771 800 3838, 0771 800 3839
email:editor@tamilpages.org. web:www.tamilpages.org

அதிக பிரதிகளை வெளியிட்டு ஐரோப்பாவின் தமிழ் பிரசுரங்களில் நுகர்வோர் தொகையிலும் பிரசுர எண்ணிக்கையிலும் தொடர்ந்து முதல் இடம் பெற்று வருகிறார்கள்

# அரவாணிகளின் சித்திரைத் திருவிழா

தமிழ்நாடு விழுப்புரம் மாவட்டம் கூவாகம் கிராமத்தில் உள்ள கூத்தாண்டவர் கோவிலில் ஆண்டுதோறும் சித்திரைத் திருவிழா நடைபெறும். இந்த விழாவில் நாடு முழுவதிலுமிருந்து பெரும் திரளான அரவாணிகள் கலந்து கொள்வார்கள்.



சித்ரா பவுர்ணமி தினத்தன்று அரவாணிகள் தாலி கட்டிக் கொள்ளும் வைபவம் நடைபெறும். இந்த விழாவையொட்டி கூவாகம் மற்றும் விழுப்புரத்தில் பல நிகழ்ச்சிகள் நடைபெறும்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக அண்மையில் அரவாணிகள் தாலி கட்டிக் கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு 8 மணிக்கு அந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அரவாணிகள் அனைவரும் பட்டுச் சேலை உள்ளிட்ட நல்ல ஆடைகளைக் கட்டிக் கொண்டு, தலை நிறைய பூ வைத்துக் கொண்டும் வரிசையாக நின்றனர்.

அவர்களுக்கு கோவில் பூசாரி தாலி கட்டினார். ஆயிரக்கணக்கான அரவாணிகள் தாலி கட்டிக் கொண்டதால் பெரும் விழாக் கோலமாக கூத்தாண்டவர் கோவில் காணப்பட்டது.

அதன் பின்னர் இரவு முழுவதும் அரவாணிகள் ஆடிப் பாடி கொண்டாடினர். பின்பு காலை அரவாண் தேரோட்டம் நடைபெற்றது. பின்னர் அரவாண் களப்பலி கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து அரவாணிகளுக்கு தாலி அறுக்கும் நிகழ்ச்சி நடந்தது. முதல்நாள் இரவு கட்டப்பட்ட தாலியை பூசாரிகள் கத்தியால் அறுத்து எறிந்தனர். இதையடுத்து அரவாணிகள் கூட்டம் கூட்டமாக கூடி ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்து ஒப்பாரி வைத்து அழுதனர். இத்துடன் கூத்தாண்டவர் கோவில் சித்திரைத் திருவிழா நிறைவடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை மறுக்கப்பட்டு உயிர் அச்சுறுத்தலில் உள்ள எங்களுக்காக குரல் கொடுங்களேன்... : யாழ். மாணவர்கள் உருக்கமான வேண்டுகோள்!

சிறிலங்கா அரசாங்கத்தாலும் இராணுவத்தாலும் உரிமை மறுக்கப்பட்டு உயிர் அச்சுறுத்தலில் உள்ள எங்களுக்காக அனைத்துலக மாணவர்களுக்கு யாழ். மாணவர்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை:

யாழ்ப்பாணத்தில் உயர்பாடசாலை மாணவர்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் எந்நேரமும் பாரிய உயிர் அச்சுறுத்துலுக்கு உள்ளாகி உள்ளனர்.

கடந்த ஆவணி மாதம் ஏ-9 வீதி மூடப்பட்டது முதல்

- யாழ். பல்கலைக்கழகத்தின் 3 மாணவர்கள்
- பாடசாலை மாணவர்கள் 8 பேர்

சிறிலங்கா இராணுவத்தின் சோதனைச் சாவடி அருகே படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சிறிலங்கா இராணுவத்தினரால் 20-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கடும் சித்திர வதைகளுக்குள்ளாகி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வைகாசி 4 ஆம் நாள் நள்ளிரவில் 4 பாடசாலை மாணவர்கள், அவர்களின் பெற்றோர் கண்முன்பே ஆயுதம் தாங்கிய குழுவினரால் கடத்தப்பட்டுள்ளனர். மாணவர்களைக் கடத்தியோர் 20-க்கும் மேற்பட்ட உந்துருளிகளில் சிவில் மற்றும் இராணுவ உடைகளிலேயே சென்றுள்ளனர். அதே வைகாசி 4 ஆம் நாள் அதிகாலை 1.30 மணிக்கு ஆயுதம் தாங்கிய சில நபர்கள், யாழ். பல்கலைக்கழக பாதுகாவலரைத் தாக்கி, பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டிருந்த இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் புகைப்படங்களை கிழித்தெறிந்து நாசமாக்கியுள்ளனர்.

வைகாசி 10 ஆம் நாள் மாணவர்கள், கல்வி சமூகப் பணியாளர்கள், விரிவுரையாளர்கள் என 320க்கும் மேற்பட்டோர் பட்டியலை வெளியிட்டு பட்டியலில் இடம் பெற்றுள்ளோருக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலானது சில பாடசாலை மாணவர்களுக்கும் யாழ்ப்பாணத்தின் முதன்மையான பாடசாலை ஆசிரியர்களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. அதன்பின்னர் பாடசாலை மாணவர்கள் 16 பேர், 8 பல்கலைக்கழக மாணவர்களும் இந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டிருப்பதாக சிவில் உடைதரித்த ஆயுதம் தாங்கிய நபர்களால் எச்சரிக்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளானது யாழ்ப்பாண கல்விச் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. நாம் அமைதி வழியில் முன்னெடுத்து நடத்துகின்ற அனைத்துப் போராட்டங்களுமே வன்முறையால் ஒடுக்கப்படுகின்றன. ஆனால் அந்த எச்சரிக்கைப் பிரசுரத்திலோ, கல்விசார் நடவடிக்கைகளுக்கு அப்பால் பல்கலைக்கழக மாணவர்கள் எந்த ஒரு செயற்பாட்டில் ஈடுபட்டாலும் பல்கலைக்கழகமே மூடப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நாம் சுதந்திரமாக எதுவித இடையூறுமின்றி கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையிலான எமது உரிமைக்காக அனைத்துலக சகோதர, சகோதரிகள் குரல் கொடுக்க வேண்டுகிறோம். யாழ்ப்பாணத்தில் பற்றி எரிந்து கொண்டிருக்கும் மாணவர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண ஒரு சிறு நடவடிக்கையைக் கூட சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

எமது அடிப்படை உரிமைகளுக்காக நாங்கள் பேச முடியாதவர்களாக உள்ளோம்.

எங்களுக்காக தயவு செய்து நீங்கள் குரல் கொடுங்கள் என்று அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.


## Wimbledon Properties Estate Agents




162 Merton High Street
Wimbledon
SW19 1AZ

Looking to
SELL.BUY OR RENT/LET
Landlords & Tennants Welcome

Please Call
**0208- 540 4450**

## EASTERN CLINIC

Natural Medicine Centre

**தேவையற்ற உடற் பருமனைக்குறைக்க...**
**புதிய விஞ்ஞான பூர்வமான சிகிச்சை**

- உடனடியான பருமன் குறைவு
- எடை குறைவு அதிகரிப்பு
- கொழுப்பையும் தேவையற்ற ஊளைச்சதையை குறைக்க
- இடை, தொடை மெலிவடைய

இயற்கை மருத்துவ நிலையம்
**ஈஸ்டன் கிளினிக்**
Dr.என்.எஸ் மூர்த்தி
இயற்கை மூலிகை மருத்துவம்
சீன அக்குபங்சர் சிகிச்சை

- கோமியோபதி
- தோல் வியாதிகள்
- முதுகு வலி
- மூட்டு வாதம்
- தலைவலி
- மன உளைச்சல்
- தலை முடி
- உதிர்தல்
- உடற் பருமன்


சிகிச்சைக்கு முன்


சிகிச்சைக்கு பின்

ஆண் பெண் இருபாலாருக்கும் பெண் மருத்துவர் அளிக்கும் சிகிச்சை

**1079 Garratt Lane**
**Tooting. London SW17 0LN**
**Tel: 020 8682 3876**


## வீடும்.... (3ம் பக்க தொடர்ச்சி)

இந்தப் பனைமரம் அன்றைய மக்களோடு மிகவும் நெருங்கியிருந்தது. பனை வேரிலிருந்து அதன் குருத்து வரை மக்களால் உபயோகப்படுத்தப்பட்டது.

ஒரு வழியில் பார்த்தால் பனையின் வேர்தான் பனங்கிழங்கு, இந்தக் கிழங்கைச் சுட்டும் அவித்தும் உண்பார்கள். பனங்கிழங்கைச் சுட்டு, தும்பு வார்த்து, துண்டு துண்டாக முறித்து உரலிலிட்டு அதனுடன் தேங்காய் வெங்காயம் பச்சைமிளமாய் முதலியன போட்டு இடித்தால் - ஓ, நினைக்க வாயூறுகிறது!.

கிழங்கை அவித்துப் பிளந்து தும்பு வார்ந்து வெயிலில் காயவைத்து எடுத்தால் அது ஓடியல், ஓடியலை இடித்து மாவாக்கி, பிட்டு அவிக்கலாம். கூழும் காய்ச்சலாம். ஓடியல் கூழும், ஓடியல் பிட்டும் யாழ்ப்பாணத்தின் முத்திரை பதித்த உணவுகள்!

பனம் பாத்தியிலிருந்து கிழங்கை எடுக்கும் போது அதன் வாலோடு ஒட்டிக் கொண்டிருக்கும் ஊமலை இரண்டாகப் பிளந்தால் அதற்குள் 'பூரான்' இருக்கும். அதன் சுவைக்கு வேறு இணையில்லை!.

பனம்பழத்தைத் தண்ணீர் ஊற்றிப் பிசைந்து அதில் வரும் பாணியை நாள்தோறும் பாயில் பரவிக் காயவிட்டால் சுமார் பத்து நாட்களில் பானாட்டு வந்துவிடும்!.

பனையைப் பற்றி எழுதிக்கொண்டே போகலாம்!

பனை மரத்தின் உபயோகம் தான் எத்தனை!

வீட்டுச் சுவர்களுக்கு மேல் எல்லாம் பனைமரங்களே! வளைகள், குறுக்கு மரங்கள், சலாகைகள் - இவற்றின் மேல் பனை ஓலைக்கூரை, வீட்டின் சுவர்களைத் தவிர மற்றயாவும் பனையிலிருந்தே பெறப்பட்டன.

பனைமட்டை, நார், ஓலை, குருத்தோலை - இந்தக் குருத்தோலையிலிருந்துதானே எங்கள் அறிவுக் கருவிகளான ஏடுகள் தயாரிக்கப்பட்டன!.

இதைவிட பனங்கள், கருப்பநீர் - இந்தக் கருப்பநீர்லிருந்து பனங்கட்டி, கல்லாக்கம்.

இன்று பனையின் உபயோகங்கள் எல்லாம் வீண்போகின்றன. அவற்றின் இடங்களை அந்நிய நாட்டுப் பொருட்கள் பிடித்துக் கொண்டு விட்டன. யாழ்ப்பாணத்தவர் பனையை ஒதுக்கிவிட்டு வெகு தூரம் விலகி விட்டார்களா!

எங்கள் வீட்டு மாலின் நடுவே இரண்டு உரல்களும் உலக்கைகளும் இருக்கும். உரல்களில் ஒன்று பெரிது. மற்றது சிறிது - பொக்கணி உரல், பெரியது குற்ற, சிறியது தீட்ட.

மாலின் இன்னொரு பக்கத்தில் நீளமாக அசைவு கட்டி அதில் உலர்த்துப் பாய்கள் சுருட்டி வைக்கப்பட்டிருக்கும். மாலின் இரண்டு பக்கங்கள் தென்னோலைக் தட்டியினால் அடைக்கப்பட்டிருக்கும். மற்ற இரண்டு பக்கங்களும் அடைப்பெதுவும் இல்லாமல் திறந்தபடி இருக்கும்.

எங்கள் வீட்டில் ஒரு சிறிய வண்டி மாலும் இருந்தது. அது தனியாகக் கட்டப்படாமல், வீட்டின் ஒரு பக்கத்தில் பத்தியாக இறக்கப்பட்டுத் தென்னோலையால் வேயப்பட்டிருந்தது. அதற்குள் எங்கள் ஒற்றைத்திருக்கல் வண்டி நிற்கும். அதற்குப் பக்கத்தில் அதை இழுக்கும் நாம்பன்மாடு கட்டி நிற்கும்.

இந்த வண்டிதான் அப்பாவின் கடைக்குப் பொருள்கள் வாங்குவதற்காக கிழமையில் இரண்டு மூன்று தரம் சங்கனைச் சந்தைக்கும், மாதத்தில் இரண்டு தரம் யாழ்ப்பாணப் பட்டினத்துக்கும் போய் வரும்.

வண்டி இழுக்கும் மாடுகளின் கால்களில் 'லாடம்' கட்டுவார்கள். லாடம் கட்டாவிட்டால் மாடுகளின் கால்குளம்புகள் தேய்ந்து அவை நடப்பதற்குக் கஷ்டப்படும்.

எனக்கு ஏழெட்டு வயதாயிருக்கும் போது, எங்கள் நாம்பனுக்கு லாடம் கட்டுவதற்காக அப்பா வண்டியைக் கொண்டு போன போது நானும் கொல்லர் வீட்டுக்குப் போயிருந்தேன்

அந்தப் 'பயங்கர' காட்சி இன்னும் என் நினைவிலிருக்கிறது.

மாட்டுக்கு லாடம் கட்டுவதை நான் அதற்கு முன் பார்த்ததில்லை. எனக்கு அப்போது ஆறேழு வயதுதானிருக்கும்.

கொல்லர் வீட்டில், வண்டியிலிருந்து மாட்டை அவிழ்ந்து ஒரு மரத்தடிக்குக் கொண்டு போனார்கள். நான் வண்டிக்குள்ளேயே இருந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.

மாட்டின் கால்களிலே ஒரு கயிற்றைச் சுற்றிப்போட்டனர். வேடிக்கையாகக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

தொபுகடீர் என்று அந்த நாம்பன் மாடு பக்கவாட்டில் சரிந்து விழுந்தது!.

நான் திடுக்கிட்டுப் பயந்து போனேன்.

அப்படி ஒரு அவலமான பயங்கரக் காட்சியை அதற்கு முன் நான் கண்டதில்லை. எங்கள் குடும்பத்தில் ஒருவர் போல இருந்த 'எங்கடை நாம்பன்' இப்படி அடியற்ற மரம் போல விழுந்ததை - விழ்த்தப்பட்டதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

'ஓ!' என்று நான் பலத்தக் குரலெடுத்து அழத் தொடங்கி விட்டேன்.

கொல்லர் ஓடிவந்து என்னைத் தூக்கித் தடவி, 'அழாதே ராசா' தம்பியின் மாட்டை நாங்கள் ஒன்றும் செய்யமாட்டோம். இப்ப விட்டிடுவோம்......' என்று ஆறுதல் கூறித் தேற்றிய காட்சி இன்னும் என் மனத்திரையில் தெரிகிறது.

'சிறு பிள்ளைகளுக்கு முன்னால் இப்படியான அவலக் காட்சிகளைக் காட்டுவது நல்லதல்ல' என்ற உளவியல் கருத்தை அவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லையென்று நினைக்கிறேன். அன்றியும், அன்றையக் கிராமத்துச் சூழ்நிலையில் மிகச்சிறு வயதிலிருந்தே இத்தகைய கொடுமையான காட்சிகளுக்குச் சிறுவர்கள் பழக்கப் பட்டிருப்பார்கள்.

ஆனால் என்னுடைய நிலை வேறு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## KNC School of Motoring

★ DSA Approved Driving Instructors with more than 20 years experience.
★ PASSPLUS registered Instructors.
★ New Drivers save £'s with Car Insurances.
★ Motorway Lessons.
★ All the Instructors are members of the Association of Driving Instructors and Road Safety Officers of Haringay

தமிழரால் தமிழில் தமிழர்களுக்கு ஓட்டுனர் பயிற்சி

உங்கள் *Theory Test and Hazard Perception Test*
ஆகிய இரண்டும் தமிழில் கணனி மூலம் பயிற்சி வழங்கப்படும்
*Practical Test* தமிழில் தரமான முறையில் பயிற்றுவிக்கப்படும்

Area Covered West London.
Please contact Patrick:
**Tel: 07956 387386, 020 8864 9329,**
**Fax : 020 8423 0403**


## அழுது அழுது களைத்து ஓய்ந்த முகங்களில் முதல் முறையாக சிரிப்புகள் வெளிப்படுகின்றனவா!



படம்: ஏ.வி.எம் நிறுவனம் சித்னத்திரை நடிகைகளுக்க விருது வழங்கி சிறப்பித்த நிகழ்ச்சி

# வாசகர் கடிதம்

**ஆசிரியர் அவர்கட்கு,**
"வீடுகள் மாடுகள்" என்ற என்ற தி.வரதரின் கட்டுரை எவ்வளவு கனகச்சிதமாக பழங் கால வாழ்க்கையை விளக்குகின்றன. அப்பாடா இன்று காலம் எவ்வாறு எல்லாம் மாறிவிட்டது. அதிலும் குறிப்பாக இன்னும் 20 வருடங்களுக்கு பின் வருகின்ற சந்ததியினருக்கு இன்றைய வாழ்க்கை முறையின் தடயங்கள்கூட கிடைக்காது போலிருக்கிறதே! (நீண்ட கடிதம்)

- த.விஸ்வநாதன், வெம்பிளி

**ஆசிரியருக்கு ஐயா,**
"தன்னம்பிக்கை வளர்க்கும் பருவம் குழந்தைப்பருவமும் பிள்ளைப்பருவமும்" என்று முன்பக்க கட்டுரையில் குறிப்பிட்டது மெத்தச்சரி. ஆனால் ஆட்கள் அதை விளங்கிக்கொண்டதாக காணோமே.! பிள்ளைகளுக்கு உணவு, உடைகொடுத்து ரியுசனுக்கு அனுப்பி படிப்பிப்பதுடன் கடமை முடிவுறுகிறது என்றே நினைக்கிறார்களா? இது பற்றி நீங்கள் வடலியில் எழுதினால் நல்லது. (நீண்ட கடிதம்)

- சித்திரலேகா மனோகரன், ரூட்டிங்

**வடலி ஆசிரியருக்கு,**
"விரைவில் பல பழைய மொழிகள் அழியப் போகின்றன" என்று பல வருடங்களாக ஊடகங்களில் அடிபட்ட செய்தியின் பின்னணியை மணவை முஸ்தப்பாவின் கட்டுரையின் மூலம் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. நன்றி.

- க.பத்மநாதன், மோடன்

**வடலி, ஐயா,**
சென்ற மாத வடலியின் 6ம் பக்கத்தில் பிரசுரமான "உயிரணுக்களாலான உடம்பு" என்னும் கட்டுரை மிகவும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய கட்டுரையாகும். உயிரணுக்களின் வாழ்க்கையையே வரிசைப்படுத்தி விட்டாரே! அதை எழுதிய ஜி.எஸ்.பி. சந்திரகுமார் அவர்களுக்கு பாராட்டுக்கள்.

- ராஜேஸ்வரன், நோர்த் கரோ

**ஆசிரியருக்கு ஒரு கோடி வணக்கம்**
தவறாமல் "இமிக்கிறேசன்" சம்பந்தமாக நிறைய எழுதி வருகிறீர்கள். இதற்கு அவர்கள் என்ன காசு தருகிறார்களா? பின்னே ஏன், செய்திகளை போட்டு பயமுறுத்துகிறீர்கள்? "அணு ஆயுதம்" கட்டுரை படித்தேன் மண்டை கிறு கிறுக்கிறது. பொது மன்னிப்பு வழங்க இருக்கிறார்களாமே அதுபற்றி எழுதினால் என்ன? வாழ்க வளர்க.

பு.செல்வராசா, ரூட்டிங் பெக்

**ஆசிரியர் அவர்கட்கு,**
"பொதுவாக பெற்றோரின் அக்கறையான கவனிப்பு, அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு, கட்டுப்பாடு என்பன ஒவ்வொரு பிள்ளைக்கும் முக்கியமானதாகும்." ஏன்னும் கருத்தும், அது குறையும் பட்சத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளும் பற்றியும் விளக்கமாகவும் விரிவாகவும் இருந்தது. எழுதிய சிவபாலு அவர்களுக்கும் ஆசிரியர் அவர்களுக்கும் நன்றி.

- கலைமகள் தங்கராஜா, வெம்பிளி


## கடை விற்பனைக்கு
## SHOP FOR SALE

**வெம்பிளி/கால்ஸ்டன் பகுதியில் OFF Licence ஒன்று விற்பனைக்கு இருக்கிறது. Lottery , Pay Point , Bus Pass மற்றும் Cards & Stationary ஆகியவை உண்டு.**

**உடன் தொடர்புகொள்ளவும்**

**Please Call: Bala 07956 959 536**

# Perma
*International Shipping Ltd*

*Shipping & Airfreight Worldwide Destinations*
*Traveling & Ticketing*
*Import & Export*
*Packing & Crating*
*Collection & Delivery*
*All sizes &Weights*
*Immediate & Insurance Cover*
*Complete Documentation Service*

- உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள்
- வாகனங்கள்
- வீட்டுப் பாவனைப்பொருட்கள்
- இயந்திர உபகரணங்கள்

- இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூருக்கு விசேட கழிவு
- ஏற்றுமதி
- இறக்குமதி
- களஞ்சியப்படுத்துதல்
- ஒழுங்குகள் செய்தல் யாவற்றிற்கும்

திறந்த **Car Park**
பிரமாண்டமான களஞ்சியம்

உங்கள் பொருட்களை இங்கு வந்தும் Pack செய்துகொள்ளும் வசதி உண்டு
உங்கள் இல்லம் வந்து Collcect செய்யும் சேவை உண்டு

**Over 35 Years Experience**

**Door to Door or Door to port service**

**Web: www.permainternational.co.uk**
**E-mail: info@ permainternational.co.uk**

*COLLECTION POINTS*
* Milton Keynes
* North London
* East London

**இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும்**

**தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ பொருட்களை அனுப்ப விரும்புகிறீர்களா? தரமான, பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்**

தொடர்புகளுக்கு............ மோகன், பேர்சி, சிவம்

**45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL**
**Tel: 020 8646 5222, Fax: 020 8646 5557, Mobile: 07939550397**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வழி திருமணம் நடத்துவது எப்படி? - 4

# திருமண நிகழ்வுகள்

**11. மாலை மாற்றுதல், மணவறையை சுற்றி வருதல்**

மணமக்களின் கைகளில் மாலைகளைக் கொடுத்து மும்முறை மாலை மாற்றிக் கொள்ளச் செய்ய வேண்டும்.

மணமகன்: நன்னாளாம் இந் நாளில் இறைவன், திருவருளால் நம் உற்றார், உறவினர், குலதெய்வமறிய, நான் உன்னைத் தமிழ் முறைப்படி திருமணம் செய்து கொண்டேன். அதற்கு அடையாளமாக இந்த மலர் மாலையை அணிவிக்கிறேன். இல்லறமாம் நல்லறத்தை இனிதே என்றும் இணைந்து நடத்துவோம் என்று கூறி மாலையை மாற்ற வேண்டும்.

மணமகள்: நன்னாளாம் இந் நாளில் இறைவன் திருவருளால் நம் செழுங்கிளை, உரிமைச் சுற்றம், உறவாம் நட்பினர், முன்னோர் குல தெய்வமறிய, நான் உங்களைத் தமிழ் முறைப்படிதிருமணம் செய்து கொண்டேன். அதற்கு அடையாளமாக இந்த மலர் மாலையை அணிவிக்கிறேன். இல்லறமாம் நல்லறத்தை இனிதே என்றும் இணைந்து நடத்துவோம் என்று கூறி மாலை மாற்ற வேண்டும்.

"குரும்பை முலை மலர்க்குழலி கொண்டதவம் கண்டு
குறிப்பினொடும் சென்று அவள்தன் குணத்தினை நன்கறிந்து
விரும்புவரம் கொடுத்தவனை வேட்டருளிச் செய்த
விண்ணவர் கோன் கண்ணுதலோன் மேவிய ஊர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அருபதம் பண்பாட அணிமயில்கள் நடமாடும் அணி பொழில் சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண் வளரும் கழனி
கமலங்கள் முகம் மலரும் கலைய நல்லூர்காணே" (சுந்தரர் தேவாரம்)
என்று அப்போது ஓத வேண்டும்.

பின்னர் மணமகனின் கையோடு மணமகளின் கையினை இணைத்துச் சொல்லும் பொருளும் என நடமிடும் பூங்கொடியென இறைவியையும், மங்கலப் பெண்டிர் ஒருவர் புனித நீரினை முன் தெளித்துச் செல்ல மணமக்கள் இருவரும் தொடர்ந்து மும்முறை வலம் வரச் செய்ய வேண்டும்.
அப்பொழுது,

அ) மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளோடும்பாடி
போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன் (நாவுக்கரசர் தேவாரம்)

ஆ) மாதர் மடப்பிடியும் மட அன்னம் அன்னதோர்
நடைஉடை மலைமகள் துணை என மகிழ்வர்
பூத இனப்படை நின்றிசை பாடவும் ஆடுவர்
அவர்படர் சடைந் நெடு முடியதோர் புனலர்
வேதமொடேழிசை பாடுவராழ் கடல் வெண்டிரை
இரைந்நுரை கரை பொருது விம்மி நின்றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபுரம் பதியே
(ஞானசம்பந்தர் தேவாரம்)
என்றோத வேண்டும். நிறைகுட நீரினை இருவருக்கும் கொடுத்து அருந்தச் செய்ய வேண்டும்.

**12. இடம் வலம் மாற்றி அமர்தல்**

மாலை மாற்றிக் கொண்ட பின், மணமக்கள் இருவருடைய வலக் கைகளிலும் சிறிது மஞ்சளரிசி கொடுத்து இணைத்துக் காதலர்கள் என்றும், பசியும் பிணியும் இன்றி, வசியும் வளனும் சிறந்து வாழ்க, வாழ்க! என்று கூறி வாழ்த்தி, இணைந்த கைகளுடன் மும்முறை எரியை வலம் வந்து, கணவன் மனைவி யானதற்கு அடையாளமாக மணமக்களை இடம் மாற்றி அமரச் செய்ய வேண்டும். (அதாவது மணமகனுக்கு இடப்புறத்தில் மணமகளை அமரச் செய்தல் வேண்டும்) அப்பொழுது,

"ஓதி நன்குணர்வார்க்கு உணர்வுடை ஒருவர்
ஒளிதிகழ் உருவம் சேர் ஒருவர்
மாதினை இடமா வைத்த எம் வள்ளல்
மான்மறி ஏந்திய மைந்தர்
ஆதி நீ அருளென்று அமரர்கள் பணிய
அலை கடல் கடைய அன்றெழுந்த
பாதி வெண்பிறை சடைவைத்த எம்பரமர்
பாம்புர நன்னகராரே" (ஞானசம்பந்தர் தேவாரம்)
என்றோத வேண்டும்.

**13. நலுங்கு செய்தல்**

(குல மரபுகளுக்கு ஏற்ப) மங்கலப் பெண்டிர் மஞ்சளரிசி மலர்கள் இவற்றைக் கொண்டு நலுங்கு நிகழ்வினை செய்ய வேண்டும். அப்பொழுது

"ஆறு கெடுப்பார்அயனும் அரியும்
அன்றி மற்றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க ஒட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவல்லி
திரு ஏகம்பன் செம்பொற் கோயில்பாடி
முறுவற் செவ்வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே"



(திருவாசகம்)
என்றோத வேண்டும்.

**14. ஆன்றோர்கள் ஆசி பெறுதல்**

நலுங்கு எடுத்தல் நிகழ்வுகளைக் குல மரபுகளுக்கு ஏற்ற வகையில் செய்த பின்னர், ஆன்றோர்களிடம் ஆசி பெறச் செய்ய வேண்டும்.

அ.) ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓராயிருர் ஈருருக் கொண்டு
ஆனந்த வெள்ளத்திடை திளைத்தால் ஒக்கும் அம்பலம் சேர்
ஆனந்த வெள்ளத்து அறை கழலோன் அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாது
இவ்வணி நலமே (மாணிக்க வாசகர்)

ஆ.) ஈருடலும் ஒருயிராய் ஏற்ற நீங்கள் செம்பொருட்டுப்
பேருடலாய் அன்பு அருளே பேணி மொழி நாடு மக்கள்
நலத் தொண்டு பண்பாய்ச் செய்யுங்கள் பரிந்து
வாழ்க மணமக்கள் வாய்மை ஈரெட்டெய்தி சூழ் செல்வம்
மக்கள் சுற்றமொடும் வாழ்க. திருக்குறள், தொண்டர்
நூல் சித்தாந்தம் உருக்கமுடன் ஓதி வாழ்க வாழ்கவே

இ.) உடலுயிர் போல மணமக்கள் ஓங்கி நீர் வாழ்க
கண்ணொளி போல காதலீர் கலந்து நீர் வாழ்க
நகம் சதைபோல நங்கை நம்பி நயத்து நீர் வாழ்க
மணியொளி போல் மணமக்கள் இணைந்து வாழ்க
மலர்மணம் போல் மங்கலத்தீர் வாழ்வித்து வாழ்க வாழ்க வாழ்கவே
என வாழ்த்துக்களை ஓதுக.

**15. காப்புக் களைதல்**

மணமக்களுக்குத் திருநீறு கொடுத்து முன்பு போல் தேங்காய், பழம் இவற்றைத் தட்டில் வைத்து மணமக்களைப் பிடித்துக் கொள்ளச் செய்து மணமகன், மணமகளின் காப்பினை அவிழ்க்க வேண்டும். அப்பொழுது,

"ஆறுலவு செய்ய சடை ஐயர் அருளாலே
பேறுலகினுக்கென வரும் பெரியவர்க்கு
வேறுபல காப்புமிகை என்றவை விரும்பார்
நீறு திரு நெற்றியின் நிறத்தி நிறைவித்தார்"
(பெரியபுராணம்)
என்றோத வேண்டும்.

மணமக்களுக்குத் திருநீறு, குங்குமம் கொடுத்துப் பின் கற்பூரம் ஏற்றிக் கண்ணேறு கழிக்க வேண்டும்.

**16. கதிரோன் வணக்கம்**

உலகின் புற இருளை நீக்கும் கதிரோனை மணமக்கள் இருவரும் மலரிட்டு வணங்கச் செய்க. அப்பொழுது,
அருக்கனில் சோதி வைத்தோன் திருத்தகு
மதியில் தண்மைவைத்தோன் திண்திறல்
தீயில் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல் திகழ்
நீரின் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் திருவடி
வணங்குகிறோம் (திருவாசகம்)
என வணங்கச் செய்க.
பின்னர், மணக்களுக்குப் பால் பழம் கொடுக்க

(தொடர்ச்சி 15ம் பக்கம்)






ஐங்கரன் இன்ரநசனல் அனுசரணையில்
விஜேய் யேசுதாஸ் & B.H. அப்துல் கமீத்
சிறப்பு கலைஞர்களாக பங்குகொள்ளும்
ஸ்ரீமதி யோகா தில்லைநாதன்
15வது ஆண்டாக பெருமையுடன் வழங்கும்
சித்திராலயாவின் பின்னணி இசையில் - சூரியா சவுண்ட் ஒலியமைப்பில்

30 June

கானக்குயில் 2007

June 30 Saturday 6.00pm
Venue: LOGAN HALL, UNIVERSITY OF LONDON, 20 BEDFORD WAY, LONDON WC1H 0AL
(Tube Station: Russell Square)
Tickets:£25, £15 Child 7.50



ரிக்கற் கிடைக்கும் இடங்கள்

Croydon Jeya Video
Croydon Aachi Masala
Ayngaran Show Room - Eastham
Ayngaran Show Room - Colierswood
Ayngaran Show Room – South Harrow
Eastham Rasam Gayathiri Silk
Tooting – A-Lanka Ltd
Tooting – Ambal Jewellers
Lewisham AJ Video
Wembley – Tharany Jewellery
Wembley High Road – Malar Super Market
New Malden – Mega Super Store
Surbiton – Tolworth – Vaishna Super Food

ஊடக அனுசரணை - தீபம் தொலைக்காட்சி

நிகழ்ச்சிக்கு ஆதரவு வழங்குவோர்: Tharany Jewellery, A-Lanka Travels Ltd, Vee kay Autos, Ambal Jewellers, Vaishna Super Food, Rathy Jewellers, Mega Super Store

For More info: Yoga Thillainathan 020 8390 5823 / 07956 133 528


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மனித அவலங்கள் தொடர்பாக நாம் அதிக அக்கறை கொண்டுள்ளோம்: உலக உணவுத் திட்ட இயக்குனர்

இலங்கையில் ஏற்பட்டுள்ள அச்சமூட்டும் மனித அவலங்கள், மனித உரிமைகளை மதிப்பதில் ஏற்பட்டுள்ள அசமந்தப் போக்கு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரி தனது கவலையை தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அதிக அக்கறைகள் எடுப்பதுடன், மனிதாபிமானப் பணிகளுக்கான வசதி களையும், உதவி நிறுவனப் பணியாளர் களுக்கான பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார். இலங்கைக்கான தனது 4 நாள் பயணத்தை முடித்துக்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட இயக்குனர் ரொனி பன்புறி கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:

இலங்கையில் தீவிரமடைந்துள்ள வன் முறைகள் காரணமாக மோசமடைந்து வரும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக நான் அதிக அக்கறை கொண்டுள்ளேன். குறிப்பாக பொதுமக்கள் தொடர்பாகவே நான் அதிக அக்கறை கொண்டுள்ளேன். அவர்களில் பலர் இடம்பெயர்ந்துள்ளனர். அடிப்படை மனிதாபிமான விதிகளை மதிக்கும் படியும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவும் ஏனைய உதவிப் பொருட்களும் சென்றடைய அனுமதிக்குமாறும், இதில் முக்கியமாக மட்டக்களப்பு மற்றும் யாழ். குடாநாட்டு மக்களுக்கு சென்றடைய உதவுமாறும் சம்மந்தப்பட்ட தரப்பினரை கேட்டுக் கொள்கின்றேன். ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிப்பதாக சில ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அவை நியாயப்படுத்த முடியாதவை மட்டுமல்ல உண்மை

WFP

அற்றவையும் கூட. இங்கே உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்களின் சேவை தூய்மையான மனிதாபிமானப் பணிகளை மட்டுமே கொண்டவை.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்காக அடுத்து வரும் 6 மாதங்களுக்கு எமக்கு 18,677 தொன் உணவுப் பொருட்கள் தேவை. இது 10.7 மில்லியன் டொலர்கள் பெறுமதியானவை. எமக்கான உதவிகள் அற்ற நிலையில் மக்களின் மனிதாபிமான தேவைகளை நாம் பூர்த்தி செய்ய முடியாது. முகாம்களில் உள்ள மக்களுக்கும், தமது இருப்பிடங்களுக்கு திரும்பிய மக்களுக்கும் நாம் உதவி வருகின்றோம். எனினும் அரசாங்கம், பலவந்தமாக மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து வருகின்றோம் என்றார் அவர்.


## ஓம் ஸ்ரீகருமாரி அம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள SB லக்ஷ்மணாராஜூ குருஜூ Aadivasi General Secretary (Face Reading) Durga Poojari திருமதி சுபலக்ஷ்மி அவர்கள் கைரேகை, முகநாடி, ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களை தமிழில், தெலுங்கில், ஆங்கிலத்தில் கூறுவார்.

துல்லியமாக கணித்து பார்க்கப்படும் விடயங்கள் (Astrology)



- ★ கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- ★ கைரேகை, முகநாடி, வசியப்பொருத்தம், பஞ்சாங்கம் பார்த்தல்
- ★ திருமணயாதகம், குறிப்பு பொருத்தம், வசியம், ஆண். பெண்
- ★ வாஸ்து சாத்திரம், நாட்டில் ஏனைய பிரச்சினைகள்
- ★ தொழில் வியாபார லட்சுமிகரம் விடயமான வசியப்பொருத்தம்
- ★ எதிரிகள், கண்திருஷ்டி , கோட் வழக்குகள்
- ★ வாகனப்பொருத்தம் லட்சுமி வசீகரம்
- ★ பெண்பிள்ளைகள் ஒற்றுமையாக பெற்றோருடன் நிலைத்திருத்தல்
- ★ பிரிந்தவர் ஒன்றுகூடுதல் எங்கு இருந்தாலும்
- ★ கிரகப் பிரவேஷம் - லட்சுமி பூசை- குரு பூசை

ஆகியவை நல்ல முறையில் கணித்தும் பூசை செய்தும் விபரங்கள் குருஜி ஆசீர்வாதத்துடன் செய்து தரப்படும்

*இவர் நியுசிலாந்து பாரீஸ், ஜேர்மனி, சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ் மற்றும் பல உலகநாடுகள் எங்கும் விஜயம் செய்துள்ளார்.*

F.C.C Super Store
Manor Park,
244-246 High Street North,
London E12 6SB

Mobile:
07852 506 993
07983 204 697
020 8470 6564


# கடந்த சித்திரை மாதம் 22ம் திகதி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் றீட் அவர்கள் ஜீ.எம் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வி

**ஜி.எம்.தொ:** மறுவமைப்புக்குள்ளான உள்நாட்டு அலுவலகம் பற்றியும் பாதுகாப்பிற்கும் பயங்கரவாத எதிர்ப்பிற்குமாக அமைக்கப்பட்ட புதிய அலுவலகம்பற்றியும் சொல்லுங்களேன்.

**ஜோன் றீட்:** மே ஒன்பதிலிருந்து செயல்படவிருக்கும் மறுவமைப்புக்குள்ளான உள்நாட்டு அலுவலகம் குற்றவியல் செயற்பாடு, குடிபெயர்வு குடிவரவு முகாமைத்துவம், பயங்கரவாத எதிர்ப்பு ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தும். நடாத்திய முதல் கூட்டத்திலேயே பயங்கரவாதத்திற்கு எதிராக உருவான சபையிலுள்ள அமைச்சர்களையும் அலுவலர்களையும் ஒன்றிணைத்து சந்திக்க வைத்தோம்.

**ஜி.எம்.தொ:** உள்நாட்டு அலுவலகத்தால் குடிவரவு தொடர்பாக எவ்வளவுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது?

**ஜோன் றீட்:** பத்தாண்டுகளுக்கு முன் மக்கள் கவனம் எல்லாம் வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதாரம் பற்றியதாகவும் அவற்றிற்கு அடுத்ததாக சுகாதார சேவை பற்றியதாகவும் இருந்தது. இப்பொழுது மக்களிடம் கேட்டால் அவர்கள் கூடிய கவனம் செலுத்துபவை முதலில் குடிவரவு, அடுத்து குற்றவியல், பின் பயங்கரவாதம் அதன்பின் நாட்டிற்கு பொதுவாக ஏற்படக்கூடிய அச்சுறுத்தல். இந்த வரிசையிலேயே இப்போது அமையும்.

அதனால்தான் நானும் அமைச்சர்களும் ஒருங்கிணைந்து, மக்கள் இப்போது வலுவுடனும் நியாயத்துடனும் குடிவரவு கையாளப் படுவதையே விரும்புகிறார்கள் என்று கூறினோம்.

குடிவரவை நோக்குவோமானால் நாட்டிற்குள் ஆற்றலைக் கொண்டு வருவதுடன் பொருளாதார மேம்பாடு மூலம், பாரிய ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது. ஆனால் மக்கள் அறிய ஆசைப்படுவது எங்கள் எல்லைகள் கட்டுப்பாட்டில் உள்ளனவா, சட்ட விரோதமாக உள்ளே வருவது ஒரு எளிதான செயலாக இல்லாமல் கை அடையாளத்துடன் கூடிய விசாவுடன்தான் உள்ளே வரவேண்டி உள்ளது என்பதையே அறிய விரும்புகிறார்கள்.

குடிவரவு ஆலோசனை சபை ஒன்று நிறுவப்பட உள்ளது. அச்சபை மக்களுக்கு பகிரங்கமாக எந்த அளவுக்கு குடிவரவு இருக்கவேண்டும் என்பதை அறிவிக்கும். அத்துடன் அது பொருளாதார நலன்களை மட்டும் கவனத்திற்கு எடுக்காது, செலவுகளையும், அதாவது பொது சேவைகளுக்குத் தேவையான செலவுகளையும் கவனத்தில் கொள்ளும்.

**ஜி.எம்.தொ:** அப்படியானால் பிரித்தானி யாவின் மக்கள் தொகைக்கு அளவான நிலையில் உள்ளதாக கருதுகிறீர்களா?


**ஜோன் றீட் :** அது நாட்டின் பொருளா தாரத்தைப் பொறுத்தது. பொருளாதாரம் வளரும்போது மக்களை உள்ளே எடுக்கலாம் மக்களுக்கு தேவைப் படும். மக்கள் குறிப்பிட்ட ஆற்றலுடனும் குறிப்பிட்ட பணிக்கான தகுதியுடனும் தேவைப் படுவார்கள்.

ஆதனாற்றான் புள்ளி அடிப்படை முறையை நடைமுறையில் ஒன்றாக்கியுள்ளோம். ஒரு துறைக்கு பணியாற்றும் தகுதியும் ஆற்றலும் எவ்வளவு கூடுகிறதோ அதற்கமைய அவர்கள் கூடுதல் புள்ளி பெறுவார்கள். அவர்கள் தகுதியும் ஆற்றலும் நாட்டுக்குத் தேவைப் படுகிறது. கூடுதல் புள்ளி பெறுபவருக்கு உள்ளே வரும் தகைமையும் கூடுகிறது.

இதனால் எங்கள் ஒழுங்குமுறை முகாமைப் படுத்தப் படுவதுடன் நியாயமானதும் என்று மக்கள் உணருவார்கள்

ஆநேக மக்கள் வெளிநாட்டவரை வெறுக்கவில்லை. நியாயமின்மையைத்தான் வெறுக்கிறார்கள். அவர்கள் கவலைப்படுவது இங்கு சட்ட விரோதமாக வந்து சட்ட விரோதமாக வேலை செய்து ஆகக் குறைந்த சம்பள ஒழுங்கை வலு அற்றது ஆக்குகிறார்கள் என்பதே.

இதில் என் அபிப்பராயம் எப்பவுமே எளிமையானது. நூங்கள் குடிவரவு போன்ற பெரிய விடயங்களை வாதிடத் தயங்கக் கூடாது. நாங்கள் நியாயமான முகாமைத்துவத்துள் அடங்கிய செயற் கட்டுப்பாடுடைய குடிவரவை வைத்துள்ளோம்



என்பதை திடப்படுத்தாவிடில் மற்றையவர்கள் துஸ்பிரயோகம் செய்யலாம்.

மக்கள் குடிவரவு அளவிலோ, சட்டங்கள் ஒழுங்காக அமுலில் உள்ளதிலோ சட்ட விரோதமாக ஆட்கள் வருவது பற்றி விசனப்பட்டால், அவர்களுக்கு இது உங்களுக்கு சம்பந்தம் இல்லாத விடயம் என்று தட்டிக் கழிக்காது உங்கள் அக்கறைக்கு ஏற்ப நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம் என்றே பதில் சொல்வோம்.

**ஜி.எம்.தொ:** ஐ.டி மட்டடை தான் சிறந்த ஆயதம் என்ற எண்ணுகிறீர்களா?

**ஜான் றீட்:** சிறந்த செயலூக்கம் கொண்ட, ஆளை அடையாளம் காணும் முறை கையில் இல்லாவிட்டால் குடிவரவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து யார் யார் வருகிறார்கள், யார் யார் யார் போகிறார்கள் என்று செயலூக்குடன் செயல்பட முடியாது, வங்கிக் கணக்கிலிருந்து திருட முயற்சி செய்து மோசடி செய்பவர்களை தடுக்க முடியாது, பயங்கர வாதத்திற்கு எதிர் நடவடிக்கை எடுக்கவும் முடியாது.

தொழில்நுட்ப வளர்ச்சியுடன் உலகம் மாறுவதால் அடையாளம் காண்பதின் முக்கியத்துவம் மென்மேலும் அதிகரிக்கின்றது. வீடு கார் வங்கிக் கணக்கு ஆகியன இன்றைய காலகட்டத்தின் உங்கள் பெறுமதிமிக்க சொத்துக்கள். உங்கள் அடையாளமும் பெரும் சொத்தாக மாறப்போகின்றது. காரணம் வங்கியல் காசு எடுக்க, விமானப் பயணம் செய்ய அடையாளம் கேட்கிறார்கள் பெரிய கடைகளிற் பொருட்கள் வாங்க போகும் போதுகூட அடையாளம் கேட்கிறார்கள். வாழ்க்கைமுறை அப்படித்தான் உள்ளது. இந்த அடையாளம் பெறுமதி மிக்க சொத்தாகி எப்பவும் மக்கள் மட்டடையைக் காவுகின்றார்கள். மற்றையவர்கள் அதைத் திருட முயற்சிக்கிறார்கள். அடையாள மோசடி 77 வீதத்தால் அதிகரித்துள்ளது.

குடிவரவை செயலூக்கம் கொண்ட கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை எடுத்தல், உங்கள் அடையாளத்தை திருட விரும்பும் கயவர்களை கட்டுப் படுத்துதல் ஆகியவற்றைப் பின்னணியில் வைத்துத்தான் இந்த முழு அடையாள முகாமைத்துவ எண்ணமும் அடங்கியுள்ளது.

சி.மா


உங்கள் அபிமான வடலியை இப்பொழுது இணையத்திலும் பார்வையிடலாம்

www.vadalee.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மனித அவலங்கள் தொடர்பாக நாம் அதிக அக்கறை கொண்டுள்ளோம்: உலக உணவுத் திட்ட இயக்குனர்

இலங்கையில் ஏற்பட்டுள்ள அச்சமூட்டும் மனித அவலங்கள், மனித உரிமைகளை மதிப்பதில் ஏற்பட்டுள்ள அசமந்தப் போக்கு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரி தனது கவலையை தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அதிக அக்கறைகள் எடுப்பதுடன், மனிதாபிமானப் பணிகளுக்கான வசதி களையும், உதவி நிறுவனப் பணியாளர் களுக்கான பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார். இலங்கைக்கான தனது 4 நாள் பயணத்தை முடித்துக்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட இயக்குனர் ரொனி பன்புறி கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:

இலங்கையில் தீவிரமடைந்துள்ள வன் முறைகள் காரணமாக மோசமடைந்து வரும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக நான் அதிக அக்கறை கொண்டுள்ளேன். குறிப்பாக பொதுமக்கள் தொடர்பாகவே நான் அதிக அக்கறை கொண்டுள்ளேன். அவர்களில் பலர் இடம்பெயர்ந்துள்ளனர். அடிப்படை மனிதாபிமான விதிகளை மதிக்கும் படியும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவும் ஏனைய உதவிப் பொருட்களும் சென்றடைய அனுமதிக்குமாறும், இதில் முக்கியமாக மட்டக்களப்பு மற்றும் யாழ். குடாநாட்டு மக்களுக்கு சென்றடைய உதவுமாறும் சம்மந்தப்பட்ட தரப்பினரை கேட்டுக் கொள்கின்றேன். ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிப்பதாக சில ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அவை நியாயப்படுத்த முடியாதவை மட்டுமல்ல உண்மை அற்றவையும் கூட. இங்கே உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்களின் சேவை தூய்மையான மனிதாபிமானப் பணிகளை மட்டுமே கொண்டவை.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்காக அடுத்து வரும் 6 மாதங்களுக்கு எமக்கு 18,677 தொன் உணவுப் பொருட்கள் தேவை. இது 10.7 மில்லியன் டொலர்கள் பெறுமதியானவை. எமக்கான உதவிகள் அற்ற நிலையில் மக்களின் மனிதாபிமான தேவைகளை நாம் பூர்த்தி செய்ய முடியாது. முகாம்களில் உள்ள மக்களுக்கும், தமது இருப்பிடங்களுக்கு திரும்பிய மக்களுக்கும் நாம் உதவி வருகின்றோம். எனினும் அரசாங்கம், பலவந்தமாக மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து வருகின்றோம் என்றார் அவர்.


## ஓம் ஸ்ரீகருமாரி அம்மன் ஜோதிட நிலையம்

**இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள** SB **லக்ஷ்மணாராஜு குருஜு** Aadivasi General Secretary (Face Reading) Durga Poojari **திருமதி சுபலக்க்ஷ்மி அவர்கள் கைரேகை, முகநாடி, ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களை தமிழில், தெலுங்கில், ஆங்கிலத்தில் கூறுவார்.**



**ஆகியவை நல்ல முறையில் கணித்தும் பூசை செய்தும் விபரங்கள் குருஜி ஆசீர்வாதத்துடன் செய்து தரப்படும்**

*இவர் நியுசிலாந்து பாரீஸ், ஜேர்மனி, சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ் மற்றும் பல உலகநாடுகள் எங்கும் விஜயம் செய்துள்ளார்.*

**F.C.C Super Store**
**Manor Park,**
**244-246 High Street North,**
**London E12 6SB**

**Mobile:**
**07852 506 993**
**07983 204 697**
**020 8470 6564**


# கடந்த சித்திரை மாதம் 22ம் திகதி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் ரீட் அவர்கள் ஜீ.எம் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வி

**ஜி.எம்.தொ:** மறுவமைப்புக்குள்ளான உள்நாட்டு அலுவலகம் பற்றியும் பாதுகாப்பிற்கும் பயங்கரவாத எதிர்ப்பிற்குமாக அமைக்கப்பட்ட புதிய அலுவலகம்பற்றியும் சொல்லுங்களேன்.

**ஜோன் ரீட்:** மே ஒன்பதிலிருந்து செயல்படவிருக்கும் மறுவமைப்புக்குள்ளான உள்நாட்டு அலுவலகம் குற்றவியல் செயற்பாடு, குடிபெயர்வு குடிவரவு முகாமைத்துவம், பயங்கரவாத எதிர்ப்பு ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தும். நடாத்திய முதல் கூட்டத்திலேயே பயங்கரவாதத்திற்கு எதிராக உருவான சபையிலுள்ள அமைச்சர்களையும் அலுவலர்களையும் ஒன்றிணைத்து சந்திக்க வைத்தோம்.

**ஜி.எம்.தொ:** உள்நாட்டு அலுவலகத்தால் குடிவரவு தொடர்பாக எவ்வளவுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது?

**ஜோன் ரீட்:** பத்தாண்டுகளுக்கு முன் மக்கள் கவனம் எல்லாம் வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதாரம் பற்றியதாகவும் அவற்றிற்கு அடுத்ததாக சுகாதார சேவை பற்றியதாகவும் இருந்தது. இப்பொழுது மக்களிடம் கேட்டால் அவர்கள் கூடிய கவனம் செலுத்துபவை முதலில் குடிவரவு, அடுத்து குற்றவியல், பின் பயங்கரவாதம் அதன்பின் நாட்டிற்கு பொதுவாக ஏற்படக்கூடிய அச்சுறுத்தல். இந்த வரிசையிலேயே இப்போது அமையும்.

அதனால்தான் நானும் அமைச்சர்களும் ஒருங்கிணைந்து, மக்கள் இப்போது வலுவுடனும் நியாயத்துடனும் குடிவரவு கையாளப் படுவதையே விரும்புகிறார்கள் என்று கூறினோம்.

குடிவரவை நோக்குவோமானால் நாட்டிற்குள் ஆற்றலைக் கொண்டு வருவதுடன் பொருளாதார மேம்பாடு மூலம், பாரிய ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது. ஆனால் மக்கள் அறிய ஆசைப்படுவது எங்கள் எல்லைகள் கட்டுப்பாட்டில் உள்ளனவா, சட்ட விரோதமாக உள்ளே வருவது ஒரு எளிதான செயலாக இல்லாமல் கை அடையாளத்துடன் கூடிய விசாவுடன்தான் உள்ளே வரவேண்டி உள்ளது என்பதையே அறிய விரும்புகிறார்கள்.

குடிவரவு ஆலோசனை சபை ஒன்று நிறுவப்பட உள்ளது. அச்சபை மக்களுக்கு பகிரங்கமாக எந்த அளவுக்கு குடிவரவு இருக்கவேண்டும் என்பதை அறிவிக்கும். அத்துடன் அது பொருளாதார நலன்களை மட்டும் கவனத்திற்கு எடுக்காது, செலவுகளையும், அதாவது பொது சேவைகளுக்குத் தேவையான செலவுகளையும் கவனத்தில் கொள்ளும்.

**ஜி.எம்.தொ:** அப்படியானால் பிரித்தானி யாவின் மக்கள் தொகைக்கு அளவான நிலையில் உள்ளதாக கருதுகிறீர்களா?


**ஜோன் ரீட் :** அது நாட்டின் பொருளா தாரத்தைப் பொறுத்தது. பொருளாதாரம் வளரும்போது மக்களை உள்ளே எடுக்கலாம் மக்களுக்கும் தேவைப் படும். மக்கள் குறிப்பிட்ட ஆற்றலுடனும் குறிப்பிட்ட பணிக்கான தகுதியுடனும் தேவைப் படுவார்கள்.

ஆதனாற்றான் புள்ளி அடிப்படை முறையை நடைமுறையில் ஒன்றாக்கியுள்ளோம். ஒரு துறைக்கு பணியாற்றும் தகுதியும் ஆற்றலும் எவ்வளவு கூடுகிறதோ அதற்கமைய அவர்கள் கூடுதல் புள்ளி பெறுவார்கள். அவர்கள் தகுதியும் ஆற்றலும் நாட்டுக்குத் தேவைப் படுகிறது. கூடுதல் புள்ளி பெறுபவருக்கு உள்ளே வரும் தகைமையும் கூடுகிறது.

இதனால் எங்கள் ஒழுங்குமுறை முகாமைப் படுத்தப் படுவதுடன் நியாயமானதும் என்று மக்கள் உணருவார்கள்

ஆநேக மக்கள் வெளிநாட்டவரை வெறுக்கவில்லை. நியாயமின்மையைத்தான் வெறுக்கிறார்கள். அவர்கள் கவலைப்படுவது இங்கு சட்ட விரோதமாக வந்து சட்ட விரோதமாக வேலை செய்து ஆகக் குறைந்த சம்பள ஒழுங்கை வலு அற்றது ஆக்குகிறார்கள் என்பதே.

இதில் என் அபிப்பராயம் எப்பவுமே எளிமையானது. நூங்கள் குடிவரவு போன்ற பெரிய விடயங்களை வாதிடத் தயங்கக் கூடாது. நாங்கள் நியாயமான முகாமைத்துவத்துள் அடங்கிய செயற் கட்டுப்பாடுடைய குடிவரவை வைத்துள்ளோம்



என்பதை திடப்படுத்தாவிடில் மற்றையவர்கள் துஸ்பிரயோகம் செய்யலாம்.

மக்கள் குடிவரவு அளவிலோ, சட்டங்கள் ஒழுங்காக அமுலில் உள்ளதிலோ சட்ட விரோதமாக ஆட்கள் வருவது பற்றி விசனப்பட்டால், அவர்களுக்கு இது உங்களுக்கு சம்பந்தம் இல்லாத விடயம் என்று தட்டிக் கழிக்காது உங்கள் அக்கறைக்கு ஏற்ப நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம் என்றே பதில் சொல்வோம்.

**ஜி.எம்.தொ:** ஐ.டி மட்டடை தான் சிறந்த ஆயதம் என்ற எண்ணுகிறீர்களா?

**ஜான் ரீட்:** சிறந்த செயலூக்கம் கொண்ட, ஆளை அடையாளம் காணும் முறை கையில் இல்லாவிட்டால் குடிவரவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து யார் யார் வருகிறார்கள், யார் யார் யார் போகிறார்கள் என்று செயலூக்குடன் செயல்பட முடியாது, வங்கிக் கணக்கிலிருந்து திருட முயற்சி செய்து மோசடி செய்பவர்களை தடுக்க முடியாது, பயங்கர வாதத்திற்கு எதிர் நடவடிக்கை எடுக்கவும் முடியாது.

தொழில்நுட்ப வளர்ச்சியுடன் உலகம் மாறுவதால் அடையாளம் காண்பதின் முக்கியத்துவம் மென்மேலும் அதிகரிக்கின்றது. வீடு கார் வங்கிக் கணக்கு ஆகியன இன்றைய காலகட்டத்தின் உங்கள் பெறுமதிமிக்க சொத்துக்கள். உங்கள் அடையாளமும் பெரும் சொத்தாக மாறப்போகின்றது. காரணம் வங்கியல் காசு எடுக்க, விமானப் பயணம் செய்ய அடையாளம் கேட்கிறார்கள் பெரிய கடைகளிற் பொருட்கள் வாங்க போகும் போதுகூட அடையாளம் கேட்கிறார்கள். வாழ்க்கைமுறை அப்படித்தான் உள்ளது.

இந்த அடையாளம் பெறுமதி மிக்க சொத்தாகி எப்பவும் மக்கள் மட்டையைக் காவுகின்றார்கள். மற்றையவர்கள் அதைத் திருட முயற்சிக்கிறார்கள். அடையாள மோசடி 77 வீதத்தால் அதிகரித்துள்ளது.

குடிவரவை செயலூக்கம் கொண்ட கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை எடுத்தல், உங்கள் அடையாளத்தை திருட விரும்பும் கயவர்களை கட்டுப் படுத்துதல் ஆகியவற்றைப் பின்னணியில் வைத்துத்தான் இந்த முழு அடையாள முகாமைத்துவ எண்ணமும் அடங்கியுள்ளது.

சி.மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்புக்கள் தீர்வாகுமா?

வாழ்க்கை என்ற சக்கரத்திலே சுகமும் - துக்கமும், உயர்வும், தாழ்வும் தவிர்க்கமுடியாத ஒன்றாக இருக்கின்றது. அந்தவகையிலே எமக்கு ஏற்பட்டு இருக்கும் சிறு தோல்விகளையும், தவிர்க்கமுடியாத இயற்கை நோய்களையும், போரின் காரணமாக ஏற்பட்டு இருக்கும் உறவினரது நிரந்தர இழப்பும், உடல் அங்கங்களை இழந்த ஊனத்தை கண்டு மனம் தளர்ந்து எம்மை நான் வெறுத்துக் கொண்டால், எம் ஆற்றல் குறைந்துவிடும். உடல் திடகாத்திரமும், உளத்திடகாத்திரமும் வெருமளவில் அழிக்கப்பட்டுவிடும். ஆகவே நாம் எம்மை விரும்பப்பழக வேண்டும் மற்றவர்களைவிட எம்மை நன்றாக காதலிக்க வேண்டும். அப்போது தன்னம்பிக்கையின் ஒளி உள்ளத்தில் உதிக்கும்.

“தன்னம்பிக்கையே வெற்றியின் அடிப்படை இரகசியம்” எனறு ரால்.'. ப் வால்டோ எமெர்ஸனின் கருத்துக்கு ஏற்ப நாம் நமது வாழ்க்கையில் எதை இழந்துபோக நேரிட்டாலும் தன்னம்பிக்கையை இழந்துபோக நேரிட்டால் எமது ஆரோக்கிய வாழ்வு சிதைவுற்று தோல்வியை தழுவிக் கொள்ளும்.

நம்மிடம் தன்னம்பிக்கை இல்லாத தற்கு முக்கிய காரணங்களில் ஒன்று நாம் நம்மிடம் புதைந்து கிடக்கும் “சக்தியை” உற்று நோக்காதது எனலாம். நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அளவற்ற ஆற்றல் சக்தி மறைந்து இருக்கின்றது. நம் உள்ளத்தின் ஆழத்திலே நமக்கு இருக்கும் சக்தி ஊற்றுப்போல பொங்கி பெருக் கெடுக்கின்றது. அவ்வூற்றை இனம்கான என்னை நானாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது ஆற்றலில் நம்பிக்கை வேண்டும். ‘எல்லாவற்றிற்கு மேலாக உன்னை நீ மதித்துப் போற்று’ என்ற பைத்தேகரஸ் என்பவரின் சிந்தனைக்கொப்ப எம்மை நாம் மதிக்க வேண்டும் அப்போதுதான் தன்னம்பிக்கை எம் மனதில் வேர்விட்டு வளர ஆரம்பிக்கும்.

“இவன் எதைச் செய்து கிழிக்கப் போறான்”

“முழுவியழத்திற்கும் உதவாதவன்”

போன்ற மற்றவர்களின் கடும் சொற்கள்கூட ஒருவனின் தன்னம்பிக்கையை இழக்கச் செய்கிறது. ஆனால் இத்தகைய கருத்துப் பரிமாற்றம் நாம் சமூகத்தில் தவிர்க்க முடியாது என்றே சொல்ல வேண்டும். நாமும் மற்றவர்கள் குறிந்து கதைத்தவை, எண்ணியவை தான் இன்று எமக்கும் சொல்லப் படுகின்றன. ஆகவே எம்மை நாம் திருத்திக்கொள்ள இக்கருத்துப் பரிமாற்றம் உதவுகின்றது. எனினும் இவற்றையும் எதிர் கொண்டு வீறுநடை போடவேண்டியது ஆரோக்கியமுள்ள மனிதனின் கடமை.

ஏனெனில் இவ்வுலகில் உயர்வாக பேசப்படும் மனிதர்கள் எல்லாம் தாம் வாழ்ந்த காலத்தில் தமது சமூகத்தினால் புறக்கணித்து குறைவான பேச்சுக்கும், இழிவுக்கும் உள்ளானவர்கள்தான். காந்தி, இயேசு, ஆபிராகம்லிங்கன், பாரதி, புதுமைப்பித்தன் இவ்வாறு ஒரு நீண்ட பட்டியல் போட்டுக்கொண்டே போகலாம். இவர்கள் எல்லாம் மற்றவரின் இழிவான கருத்தைக் கேட்டு சோர்ந்து போகவில்லை. மனதிலே தன்னம்பிக்கையை வளர்த்து தமது ஆற்றல், ஆளுமைகளை இனம் கண்டு வெளிக்கொணர்ந்தார்கள்.

எனவே மற்றவர்கள் எம்மைக் குறித்து எத்தகைய விமர்சனத்தை சொன்னாலும் அவற்றை எம்மோடு ஒப்பிட்டு எம்மை மீள் பார்வைக்கு உட்படுத்தி திருத்தக்கூடியதை திருத்தி, தவிர்க்கக் கூடியதை தவிர்த்து நம்மை நாம் நேசித்து, எமது ஆற்றலை இனம் காணவேண்டும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்மால் முடியும் என்று எண்ணி, உணர்ந்தால் பெரும்பாலும் நம்மால் முடியும். ஆகவே எல்லாம் எமது சிந்தனையைப் பொறுத்துத்தான் இருக்கின்றது. மற்றவர்கள் எப்படி குறைவாக இழிவாக பேசினாலும் எமது சிந்தனையில் எதையும் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கை கொண்டிருந்தால் நாம் வெற்றி பெற்றவர்களாகிறோம்.

- வி.பி.தனேந்திரன்


SS Estate Agent

வளமான வாழ்வுக்கு ...
வதிவிடம் வாங்கிட..

£1000 முதல் 100,000 வரை தொழில் கடன் வசதி, வீடு வாங்க, விற்க மற்றும் வாடகைக்கு அமர்த்த நம்பகரமான நிறுவனம் SS Estate Agent.

குறைந்த முதலீட்டில் வீடு மற்றும் வியாபார ஸ்தாபனங்கள் வாங்குவதற்கும் எங்களை நாடுங்கள்.

Sales - Lettings- Mortgages

40-42, First Floor, High Street North,
East Ham, London E6 2HJ
Tel: 020 8471 7779 Fax: 0871 522 7277


## பாடை ஒன்று ஏறுகுது...

காணி பூமி விற்றுக் கொஞ்சம் கடனும் வாங்கி
கண்மணியைக் கடல் கடந்து அனுப்பிக் காத்து
கோணிக்குறுகி வாழ்ந்தும் கடனும் நீள
கொடுத்தவனோ வீடு தேடி நாளும் சேர
நாணித் தலை குனிந்தே நடப்பும் சொல்ல
நம்பிக்கை ஒன்றினனால் அவரும் போக
வாணி வடித்தபடி வீதியெங்கும்
வலம் வருதாம் பெண்களுக்காய் அந்தச் சேயும்.

கடைகளிலே கப்பமெனப் பணமும் வாங்கி
கஞ்சாவின் புகையினிலே மயக்கம் காணும்
படைத்தலைமை கிடைத்ததெண்ணி உழைப்பும் அற்றே
பாதைகளில் நடத்துவதோ இழிவாய் தர்பார்
வாடையது தெரிந்திடுத்து பலரின் நெஞ்சுள்
வலம் வருது இவர்நோக்கி பொலீசின் கண்ணும்
கோடையிலே மழைபெயலாம் நியதி மாறி
கொட்டமதை விரைவடக்கும் நீதிமன்றும்.

ஆண்டு ஐந்து கழிந்திடுத்து சேயும் வந்து
அந்தரத்தில் பெற்றவரின் நிலையும் இன்று
வாண்டுகளின் துணையுடனே குழுவாய் தம்பி
வலம் வருறார் ஆயுதங்கள் சகிதம் நாளும்
கூண்டு ஒன்று திறந்திருக்கு இவர்க்காய் இன்றும்
கொண்டுவந்து தள்ளிவிடும் சிறிதே காலம்
மாண்டவனாய் எண்ணி அவன் தாயும் இன்றோ
மரணமென நினைத்தபடி சடங்கும் அங்கு

த.சு.மணியம்

# சுய மருத்துவம், பெண்களுக்கு ஓர் எச்சரிக்கை..

ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களது உடலமைப்பு மிகவும் சிக்கலானது. உடல் ரீதியாக பெண்கள் சந்திக்கும் பிரச்சினை களும் நிறைய.

ஆண்களைவிட பெண்களே அதிக மருந்து, மாத்திரைகளை உபயோகிப் பவர்களாக இருக்கிறார்கள். சுய மருத்துவம் செய்துகொள்ளும் பெண்களும், அளவுக்கதிகமாக மருந்து, மாத்திரைகளை உபயோகிக்கும் பெண்களும் கவனத்தில் கொள்ள வேண்டிய சில முக்கிய விடயங்கள்...

கர்ப்ப காலத்தில் ஏற்படும் இயற்கையான உடல் உபாதை களை, உடலில் நிகழும் மாற்றங் களை ஏதோ வியாதிகளின் அறிகுறிகளாகப் புரிந்துகொள்ளும் பெண்கள் பலர். கர்ப்ப காலத்தில் மருத்துவரின் ஆலோசனையின்றி உபயோகிக்கும்.

எந்த மருந்தும் அந்தப் பெண்ணை மட்டுமின்றி, அவளது கருவிலுள்ள குழந்தையையும் சேர்த்தே பாதிக்கும். கர்ப்பம் தரித்த முதல் மூன்று மாதங்கள் வரை கருவிலிருக்கும் குழந்தையின் உறுப்புகள் வளரும் காலம். தாய் உட் கொள்ளும் மருந்துகள் அதன் வளர்ச்சியைப் பாதிக்கக்கூடும். குறைப்பிரசவம் நிகழவோ, கரு கலையவோ வாய்ப்புகள் உண்டு.

நான்காவது மாதம் முதல் ஆறாவது மாதம் வரை உட்கொள்ளும் மருந்துகள் குழந்தையின் முதுகெலும்பு, இடுப்பெலும்பு, மூளை வளர்ச்சி ஆகியவற்றை பாதிக்கலாம். எனவே கர்ப்ப காலத்தில் சாதாரண காய்ச்சல், தலைவலிக்குக்கூட மருந்துகளை உபயோகிக்கக் கூடாது.

அடுத்தது தாய்ப்பாலூட்டும் காலம். இந்தக் காலத்திலும் பிரசவித்த பெண்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். சில வகை மருந்துகள் தாய்ப்பாலுடன் கலந்து குழந்தைக்குப் போகக்கூடும்.

கர்ப்பத்தைத் தற்காலிகமாகத் தடை செய்ய கருத்தடை மாத்திரைகள் உபயோகிப்பது பெரும்பாலான பெண்களது பழக்கம். கருத்தடை மாத்திரைகள் நம்பகமானவை என்பதால் அதை நாடும் பெண்களது எண்ணிக்கையும் அதிகம். ஆனால் மருத்துவரின் ஆலோசனை யின்றியோ, நீண்ட நாட்களுக்கோ இவற்றை உட்கொள்ளும் பெண் களுக்கு மார்பகப் புற்றுநோய், மலட்டுத்தன்மை, உடல் எடை அதிகரித்தல், ரோம வளர்ச்சி போன்றவை ஏற்படலாம்.

மெனோபாஸ் காலக்கட்டத்தில் இருக்கும் பெண்களுக்கு உடலளவிலும், மனத்தளவிலும் பல்வேறு மாற்றங்கள் நிகழ்வது வழக்கம்.. அவற்றையெல்லாம் ஏதோ நோய்களின் அறிகுறிகளாக நினைத்துக் கொண்டு மருந்து, மாத்திரைகளை உட் கொள்வது மிகவும் ஆபத்தானது.

அழகாக இருக்க ஆசைப்படாத பெண்களே இருக்க மாட்டார்கள். உடலை இளைக்க, சுருக்கங்கள் விழாமலிருக்க என எல்லா வற்றுக்கும் இயன்ற மருந்து, மாத்திரைகள் வந்து விட்டன. அவற்றை உட்கொள்ளும் பெண்கள் மிகப் பெரிய பின்விளைவு களை சந்திக்கிறார்கள். சத்தான ஆகாரம், உடற்பயிற்சி மற்றும் சந்தோசமான மனநிலை ஆகியவையே அழகின் அடிப்படை என்பதை இவர்கள் உணர வேண்டும்.

சாதாரண தலைவலி, காய்ச்சல் போன்றவற்றுக்குக் கூட தானாகவே ஏதேனும் மருந்து, மாத்திரைகளை உட்கொள்ளும் பெண்கள் பலர், எதற்கெடுத்தாலும் மருந்து உட்கொண்டு பழகிவிட்டால் பிற்காலத்தில் அதுவே நிரந்தரமாகி விடும் வாய்ப்புண்டு. மருந்துகளின் செயல் திறனும் பாதிக்கப்படும். கூடியவரையில் இயற்கை முறையில் சிகிச்சைகளை மேற்கொள்வதே பெண்களுக்குப் பாதுகாப்பு.


RADIUS SERVICE LTD

For Sales, Service and Repairs of Commercial Refrigeration & Air-Conditioning

உங்களின் அனைத்து குளிர்சாதன உபகரணங்களின் தேவை, மற்றும் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்



- Shelving
- Chillers, Freezers
- Air Conditioning systems
- Shop Fitting
- Cold rooms etc.

- Remote Dairy Low Fronted
- Plug in Dairy
- Double Door Chillers
- Jumbo Freezers





Unit: 23-24 Resolution Way
London, SE8 4NT
Tel: 020 8692 0257 / 020 8694 2786


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்கள் மீதான கொலை அச்சுறுத்தல்கள், படுகொலைகளை கண்டித்து வன்னியில் மாபெரும் கண்டனக்கூட்டம்.

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட செல்வராசா ரஜிவர்மன், சந்திரபோஸ் சுதாகர் அகிய ஊடகவியலாளர்களின் படுகொலை களை கண்டித்தும், தமிழ் செய்தி தகவல் மையம ஊடகவியலாளர்கள் உட்பட் அனைத்து தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான கொலை அச்சுறுத்தல்களை கண்டித்தும் கடந்த வைகாசி மாதம் 6ம் திகதி கிளிநெச்சி தமிழீழ நுண்கலை கல்லுரியில் காலை 10.30 மணியளவில் மாபெரும் கண்டன பொதுக் கூட்டம் நடைபெற்றது.

ஊடகவியலாளர் எதிர்நோக்கும் கொலை அச்சுறுத்தல்களை கண்டித்தும் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் கொலைகளை செய்தவர்களை உலகுக்கு அம்பலப்படுத்த கோரும் கண்டன அறிக்கையை வாசிக்கப்பட்டு அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள், தமிழ் உணர்வாளர்களின் கையொப்பத்துடன் அவ்அறிக்கை ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்துக்கும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கும், இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புகுழு மற்றும் சர்வதேச தூதுவராலயங்களுக்கும் அனுப்பப்பட்டது.

# கடல்கள் வற்றிப் போகுமா?

பூமியின் சராசரி வெப்பம் சில காரணங்களால் அதிகரித்து வருவதாகவும் இதன் விளைவாக அண்டார்டிகா உட்பட வட, தென் துருவங்களில் பனிக்கட்டிப் பாளங்கள் உருக ஆரம்பித்துக் கடல் மட்டம் உயருகிற ஆபத்து உள்ளதாகவும் அவ்வப்போது பயமுறுத்தும் எச்சரிக்கைகள் வெளியாகி வருகின்றன.

மாறாக, பூமியின் சராசரி வெப்பம் பல டிகிரி குறைந்தால் என்ன ஆகும்? வட, தென் துருவங்களில் பனிப் பாளங்கள் அதிகரிக்கும். வட அமெரிக்கக் கண்டத்தின் வட பகுதி - கனடா நாடு அமைந்துள்ள பிராந்தியம் - உறை பனியால் மூடப்படும். இங்கிலாந்தின் வட பகுதியும் இதே போல பனிக்கட்டியால் மூடப்படும். நோர்வே, ஸ்வீடன், டென்மார்க், லாட்வியா, லிதுவேனியா என ஐரோப்பாவின் வட பகுதியில் உள்ள நாடுகள் இராது. அவை அனைத்தும் பனிக்கட்டிப் பாறைகளின் அடியில் சிக்கியதாகிவிடும். தென் அமெரிக்காவின் தென் பகுதியும் பனிக்கட்டியால் மூடப்பட்டதாகி விடும். இப்படியெல்லாம் நடக்க வாய்ப்பு உள்ளதா என்று நீங்கள் வியக்கத் தேவையில்லை. ஏற்கெனவே இப்படிப் பல தடவை நடந்துள்ளது.

கி.மு. 8000 வாக்கில் மேற்சொன்ன நோர்வே, ஸ்வீடன் முதலான நாடுகள் இருக்கவில்லை. கனடாவும் அப்படித்தான். அவையெல்லாம் மேலே விவரிக்கப்பட்ட வகையில் பனிக்கட்டியால் மூடப்பட்டவையாகத் தான் இருந்தன. இவ்விதம் உலகில் - குறிப்பாக வட பகுதிகளில் பெரும்பாலானவை பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்த காலம் பனி யுகம் (ஐஸ்ரீங் அஞ்ங்) என்று குறிப்பிடப் படுகிறது.

பூமியில் பனியுகம் கடந்த காலத்தில் அடிக்கடி ஏற்பட்டுள்ளது. பனியுகம் தோன்றும். பிறகு பெரும் பிராந்தியங்களில் பனிக்கட்டிகள் பின்வாங்கி அவை மனித வாழ்க்கைக்கு ஏற்றவையாகிவிடும். கடைசி பனியுகம் அகன்று 10,000 ஆண்டுகள் ஆகின்றன. சுமார் 18 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பனியுகம் உச்ச கட்டத்தில் இருந்த போது கடல் மட்டம் இப்போது உள்ளதை விட 80 மீட்டர் குறைவாக இருந்தது. அதாவது பனியுகம் உச்ச கட்டத்தை எட்டும் போது கடல்கள் வற்றுகின்றன.

சுமார் 230 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கி இதுவரை 6 தடவை பனியுகங்கள் தோன்றி அகன்றுள்ளன. கடைசியாக ஏற்பட்ட பனியுகம் 80,000 ஆண்டுகள் நீடித்தது. ஆனாலும் இந்த நீண்ட காலத்தில் இடையிடையே நான்கு தடவை பனியுகம் தணிந்த காலங்கள் உண்டு. இது பனி தணிந்த காலம் என்று வருணிக்கப்படுகிறது.

கடைசி பனி யுகம் அகன்ற பிறகும் உலகில் வெப்ப - குளிர் நிலை ஒரே சீராக இருந்து வருவதாகச் சொல்ல முடியாது. ரோமானிய சாம்ராஜ்ய காலத்தில் உலகில் சராசரி வெப்ப நிலை இப்போது உள்ளதை விட சற்றே அதிகமாகத்தான் இருந்தது. அதன் பின்னர் கி.பி. 400 முதல் 800 வரையிலான காலத்தில் பனி யுகம் சற்றே தலை காட்டியது. பிறகு வெப்ப உயர்வுக் காலம் தோன்றி அது கி.பி. 1200 வரை நீடித்தது. பிறகு குட்டிப் பனி யுகம் என்று சொல்லப்படுகிற கால கட்டத்தில் கிரீன்லாந்தில் இருந்த குடியேற்றங்கள் அழிந்தன. 1780-க்குப் பிறகு வெப்பம் அதிகரிக்கலாயிற்று.

கடந்த காலத்தில் கடும் பனி யுகம் நிலவிய காலத்திலும் சரி, பூமி முழுவதும் பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்ததாகச் சொல்ல முடியாது. பூமியின் மையக் கோட்டை ஒட்டிய பிராந்தியங்கள் பனிக்கட்டியால் மூடப்பட்டது கிடையாது.

இப்போது அண்டார்டிகா கண்டம் பல கிலோ மீட்டர் ஆழத்துக்கு பனிப் பாளங்களால் மூடப்பட்டுள்ளது. வடக்கே கிரீன்லாந்தும் அப்படித்தான். வட துருவத்தின் ஆர்க்டிக் கடல் பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்தாலும் இது மிதக்கும் பனிக்கட்டிகளாக உள்ளதே தவிர கனத்த பனிக்கட்டிப் பாளங்களாக இல்லை. சூரியனை பூமி சுற்றுகிற பாதையிலான சிறு மாற்றம், பூமியின் சாய்மானத்திலான மாற்றம், சூரியனிலிருந்து பூமி பெறுகிற வெப்ப அளவிலான மாற்றம் என பனி யுகம் அவ்வப்போது தலைகாட்டுவதற்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும் திட்டவட்டமான காரணங்கள் தெரியவில்லை.

- என்.ராமதுரை

# இலங்கையில் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 51 வீதமான மாணவர்கள் சித்தியடையவில்லை

இலங்கையில் இறுதியாக நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் 51 வீதமான மாணவர்கள் சித்தியடைய வில்லை என்று சிறிலங்காவின் கல்விப் பொதுப் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2,98,358 பாடசாலை மாணவர்கள் உட்பட 5,25,000 மாணவர்கள் இந்த பரீட்சையில் தோற்றி இருந்தனர். இதில் 48.7 வீதமான மாணவர்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்திற்கு தெரிவாகி உள்ளனர்.

பரீட்சைக்கு தோற்றியவர்களில் 21,813 மாணவர்கள் ஒரு பாடத்திலும் சித்தியடைய வில்லை. இதில் 4,128 பேர் கொழும்பு மாவட்டம், 3,564 பேர் மத்திய மாகாணம், 3,404 பேர் தென் மாகாணம், 2,668 பேர் சப்ரகமுவ மாகாணம், 2,277 பேர் ஊவா மாகாணம், 2,056 பேர் வடமத்திய மாகாணம், 2,039 பேர் வடமேற்கு மாகாணம், 773 பேர் கிழக்கு மாகாணம், 704 பேர் வடமாகாணம் ஆகியவற்றை சேர்ந்தவர்கள்.

கொழும்பில் உள்ள 9 பாடசாலைகளில் இருந்து ஒரு மாணவனும் சித்தியடைய வில்லை. இதே போலவே கோமகமவில் உள்ள 3 பாடசாலைகள், ஜெயவர்த்தன புரவில் உள்ள 3 பாடசாலைகள், காலியில் உள்ள 12 பாடசாலைகள், அம்பலாங் கொடையில் உள்ள 7 பாடசாலைகள், இரத்தினபுரியில் உள்ள 13 பாடசாலைகள், நாட்டில் உள்ள 40 பிரிவீனா (புத்த மத குருக்களுக்கான) கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் இருந்தும் ஒரு மாணவனும் சித்தியடையவில்லை.

அரசு, கல்விக்கு அதிகளவு நிதியை ஒதுக்கும் போதும் இது துரதிர்ஸ்டவசமானது. பாடப்புத்தகங்கள், ஆய்வுகூடங்கள், ஏனைய பொருட்கள் என பல வசதிகள் இருந்தும் மாணவர்களின் தரம் உயரவில்லை.

ஆங்கிலம் மிகவும் பின்தங்கியதாகவே உள்ளது. ஆங்கில பாடம் எடுத்த 258,975 மாணவர்களில் 63.18 வீதமானவர்கள் சித்தியடையவில்லை. கணிதத்துறையில் 259,263 மாணவர்களில் 57.37 மாணவர்களும், விஞ்ஞானத்தில் தோற்றிய 258,948 மாணவர்களில் 51.65 விகிதமான மாணவர் களும் சித்தியடையவில்லை.

கணிதத்துறையில் உள்ள புவியியல் தொடர்பான வினாக்களுக்கு 90 வீதமான மாணவர்கள் பதிலளிக்கவில்லை. காரணம் ஆசிரியர்களுக்கும், கல்வி அதிகாரிகளுக்கும் புவியியல் தெரியாது. கல்விக் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் ஆசிரியர்களுக்கு புவியியல் தெரியாது எனவே அவர்களுக்கு அதனை கற்பிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இது தொடர்பான அறிக்கை கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவினால் இந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

# அவசர நகரவாசிகள்

முந்தியவன்பாடு கொண்டாட்டம். பிந்தியவன் கதையோ அரோகராதான் என்பதுதான் இன்றைய நவீன யுகத்தின் தாரக மந்திரம் என்றே சொல்லத் தோன்றுகின்றது. அந்த அளவுக்கு, அவசரம் இல்லையென்றால், அதைக் கோட்டைவிட்டுவிட்டு, திருதிருவென்று முழிக்கும் நிலைதான் வந்து சேரும். உலகெங்கிலுமுள்ள 32 வேறுபட்ட நகரங்களில், பிரித்தானியா ஓர் ஆய்வை அண்மையில் நடாத்தி முடித்துள்ளது. அது என்ன தெரியுமா? நகரத் தெருக்களில், எந்த நாட்டுப் பாதசாரிகள் வேகமாக நடைபயில் கின்றார்கள் என்பதைக் கண்டறிவதுதான் இந்த ஆய்வு. ஒரு தசாப்த காலத்திற்கு முன்பு இருந்ததைவிட, இன்றுள்ளவர்கள், 10 வீதம் அதிகமான வேகத்துடன் நடக்கின்றார்கள் என்பதுதான் அந்த ஆய்வில் கண்டறிந்த புது விடயம். முதலிடம் யாருக்குத் தெரியுமா? ஓர் ஆசிய நாட்டுக்குத்தான். இரண்டாவது இடம் டென்மார்க்கின் ஊழிநரொயபநெ நகருக்கும், மூன்றாவது இடம் ஸ்பெயினின் மட்ரிட் நகருக்கும் போயுள்ளது. முதல் பத்து இடங்களில், ஆய்வை நடாத்திய



பிரித்தானியாவின் இங்கிலாந்து எட்டிக்கூட பார்க்கவில்லை என்பது கொசுறுச் செய்தி. ஆனால் டப்ளின் நகரம், ஐந்தாவது இடத்திற்குள் மூக்கை நுழைத்திருக்கின்றது. முதலாவது இடம் எந்த நாட்டுக்குக் கிடைத்தது? சில நிமிடங்கள் காத்திருங்கள். இறுதிச் செய்தியின் முடிவில் விடை வரும்.

# கண்டங்கள் நகர்வு

கண்டங்கள் நகர்விற்கு நிலப்பரப்புகளின் எல்லை விளிம்புகள், பாறை, புதை படிவுகள் ஆகியவை சான்றாகின்றன. அட்லாண்டிக் கடலின் இரு புறத்திலும் உள்ள கண்டங்களின் எல்லை விளிம்புகள் கனகச்சிதமாகப் பொருந்தும் வகையில் உள்ளன. அட்லாண்டிக் கடலின் மேற்குக் கரை, கிழக்குக் கரை ஆகியவையும் ஒன்றோடு ஒன்று பொருந்தும் வகையிலேயே இருக்கின்றன. முற்காலத்தில் மேற்கூறிய நிலப் பகுதிகள் ஒன்றாக இருந்திருக்க வேண்டும் என்பதற்கான சான்றுகள் இவை.




# SPICE LAND

**FOR THE ASIAN TASTE OF SPICE CURRY**

குளிரூட்டப்பட்ட ..... மேலதிக இடவசதி கொண்ட ......

100 இடியப்பம் சம்பல் சொதியுடன் £12 பவுண் மட்டுமே

திருமண வைபவங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், சமூக ஒன்றுகூடல்கள் போன்ற உங்கள் விருந்துபசார தேவைகள் எதுவானாலும் அதற்கு தகுந்தபடி சுவையான, தரமான உணவுகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

212 LONDON ROAD,
CROYDON,
SURREY CR0 2TE

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்
020 8667 1700
020 8649 8895
07984 038 757

7 days a week
Open 11am to midnight

£15 பவுண்களுக்கு மேல் உணவை வாங்கினால் 3 மைல் எல்லைக்குள் இலவசமாக வினியோகம் செய்யப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலோ கவ் ஆர்யு, வெல்க்கம் — பாய் பாய் ''மக்கள் வணக்கம்'' — வருக வருக

ஐரோப்பாவில் தமிழ் தொலைக்காட்சியில் காண்பிக்கப்படுகின்ற நிகழ்ச்சிகளில் அதிக அளவிலான ஆங்கிலக் கலப்புகள் இருப்பதால் ஒரு நல்ல நிகழ்ச்சியைக் கூட பார்க்கச் சகிக்காமல் தமிழ் தொலைக் காட்சியையே பார்க்காமல் விடுகிறவர்கள் அனேகர் இருக்கிறார்கள்.

ஆனால் இன்று இதே நிகழ்ச்சிகள் பிறந்த அதே மண்ணில் இருந்து முற்றிலும் மாறுபட்ட சிந்தனைகளுடன் தமிழ்மொழி உணர்வுடன் ஒருதொலைக்காட்சி ஒன்று வெளிவந்து கொண்டிருக்கிறது. அதுதான் ''மக்கள் தொலைக்காட்சி'' இந்த மக்கள் தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகள் பல இப்போது ''தரிசனம்'' தொலைக்காட்சி ஊடாக ஐரோப்பிய தமிழ் நெஞ்சங்களின் இல்லம் வந்துசேர்ந்துள்ளது.

அதிகளவிலான ஆங்கிலக் கலப்பால் மனம்நொந்து, பார்க்க, கேட்கச் சகிக்காமல் தமிழ்தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்காமல் இருந்தவர்களுக்கு தரிசனத்தில் வரும் ''மக்கள் தொலைக்காட்சி'' நிகழ்ச்சிகள் நிச்சயம் ஆறுதல் அளிக்கும்.

''ஹலோ கவ் ஆர்யு'' ''வெல்கம்'' என்றேல்லாம் தமிழ் நிகழ்ச்சிகள் கொச்சைப் படுத்துவதை வேறொரு மாற்றுவழி எதுமின்றி பார்த்து வந்தவர்களுக்கு ''மக்கள் வணக்கம்'' யார் பேசுகிறீர்கள் அம்மா, ஐயா என்று அழகு தமிழில் பேசுவது நிச்சயம் மகிழ்ச்சி உண்டாக்கும்.

செய்திகள், தமிழ் பேசு தங்கக் காசு, அறமும் புறமும், மலரும் பூமி, மகளீர் உலகம், வழிகாட்டி, குழந்தை நிகழ்ச்சி, வளாகம், நீதியின்குரல் போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. நிகழ்ச்சிகளை பார்க்கும் பொழுது, ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் ''தமிழ்மக்களின் பெருமையை நிலைநாட்ட வேண்டும், வேற்றுமொழி வேற்று கலாச்சாரத்திற்கு தமிழ்மக்கள் சோரம் போகக்கூடாது, தமிழ் மக்கள் தமது பெருமையை உணர்ந்து வாழ வழியமைக்க வேண்டும்'' என்ற கடமை உணர்வுடன் நடத்தப் படுகிறது என்ற எண்ணம் தோன்றுகிறது.

தரிசனம் தொலைக்காட்சியில் தாயகம் சம்பந்தமான செய்திகளும் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் நகைச்சுவை நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்படுகின்றன. இனி வரும் நாட்களில் ஈழத்தமிழ் நிகழ்வுகளும் செய்திகளும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது!

- நெ.மு

# கர்ப்பிணிகளுக்கு ஆப்பிள், மீன் உணவுகள் அவசியம்

பிறக்கும் குழந்தைகளுக்கு ஆஸ்துமா மற்றும் ஒவ்வாமை (அலர்ஜி) நோய்கள் தாக்காமலிருக்க, கருவுற்ற பெண்கள் ஆப்பிள் மற்றும் மீன் உணவுகளை உட்கொள்வது அவசியம் என தெரியவந்துள்ளது.

பிரித்தானியாவின் அபடீன் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது. கருத்தரித்திருந்தபோது ஆப்பிள்களை அதிக அளவில் உண்ட பெண்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு, 5 வயது வரை மூச்சிழைப்பு



அல்லது ஆஸ்துமா நோய் ஏற்படுவது ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகவே இருந்தது. இதேபோல மீன் உட்கொள்ளாத தாய் மார்களின் குழந்தைகளோடு ஒப்பிடும்போது, குறைந்தது வாரத்துக்கு ஒருமுறை மீன் உணவு உட்கொண்ட தாய்மார்களுக்கு பிறந்த குழந்தைகளுக்கு ஆஸ்துமா நோய் தாக்குவது மிகக் குறைவாக இருந்ததும் ஆய்வில் கண்டறியப்பட்டது.

அமெரிக்காவில் கடந்த வைகாசி 20ம் திகதி நடைபெற்ற சர்வதேச மருத்துவ கருத்தரங்கு ஒன்றில் இந்த ஆய்வு முடிவுகள் சமர்ப்பிக்கப் பட்டன. காய்கறிகள், பழச்சாறுகள், பால் பொருள்களில் இருந்து பெறப்பட்ட கொழுப்பு, முழு தானிய உணவுகள் உள்ளிட்ட பல உணவு வகைகளைக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது. ஆப்பிள் மற்றும் மீன் தவிர வேறு உணவுகளுக்கு ஆஸ்துமா, ஒவ்வாமை நோய் எதிர்ப்புப் பண்புகள் இருப்பதாக இந்த ஆய்வில் கண்டறியப்படவில்லை.

மீன் உணவில் உள்ள ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள், ஆப்பிளில் உள்ள பிளேவனாய்டுகள் (அன்ரிஒக்சிடன்ற்) போன்றவை இந்த எதிர்ப்பு சக்திக்கு காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

1212 குழந்தைகள் மற்றும் அக் குழந்தைகளின் தாய்மார்களை வைத்து மேற்குறிப்பிட்ட ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. கர்ப்பமாக இருந்தபோது, தாம் உண்ணும் உணவு தொடர்பான கேள்விகளுக்கு தாய்மார்கள் பதிலளித்தனர். 5 ஆண்டுகள் கழித்து தமது பிள்ளைகளுக்கு உள்ள சுவாச நோய்கள் மற்றும் ஒவ்வாமை நோய்கள் பற்றிய தகவல்களையும் அவர்கள் அளித்தனர். இந்தக் குழந்தைகளுக்கு நுரையீரல் செயல்பாடு மற்றும் ஒவ்வாமை தொடர்பான மருத்துவச் சோதனையும் நடத்தப்பட்டது. இவற்றின் அடிப்படையிலேயே இந்த ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதே குழந்தைகளை வைத்து முன்னர் நடத்தப்பட்ட வேறொரு ஆய்வில், கருவுற்ற காலத்தில் எடுத்துக் கொள்ளும் ''இ'' மற்றும் ''டி'' வைட்டமின்கள், துத்தநாகச் சத்து ஆகியவை, குழந்தைகளுக்கு ஆஸ்துமா மற்றும் ஒவ்வாமை நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கின்றன என்பதும் கண்டறியப்பட்டது.

புதிய ஆய்வு முடிவுகள் உறுதிப்படுத்தப் பட்டால், குழந்தைகளுக்கு ஆஸ்துமா மற்றும் ஒவ்வாமை நோய்கள் வராமல் தடுக்கும் வகையில், கருவுற்ற காலத்தில் தாய்மார்கள் உட்கொள்ள வேண்டிய உணவு வகைகளை மருத்துவர்கள் பரிந்துரைக்க முடியும்.


அம்பாள் ஜூவல்லர்ஸ்

✪ உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயர்ரக டிசைன்கள் உங்கள் எண்ணத்தை நிஜமாக்கி ஜெலிக்க வைக்கும் நேர்த்தியான தங்க நகைகள்

✪ கலை வண்ணத்தைப் பிரதிபலிக்கும் புத்தம் புது நகைத் தேர்வுகள்

✪ நெஞ்சில் இன்பத்தை விளக்கேற்றும் தங்க நகை அரங்கம் அம்பாள் ஜுவல்லர்ஸ்



Ambaal Jewellers
176 Upper Tooting Road
Tooting
London SW17 7ER
**Tel: 020 8672 9955**
**Fax: 020 8672 7097**


# இராச்சிய சபை தேர்தலில் போட்டியிட கவிஞர் கனிமொழி தெரிவாகியிருக்கிறார்

தமிழ்நாடு முதல் அமைச்சர் கலைஞர் கருணாநிதியின் 39 வயதான மகள் கவிஞர் கனிமொழி, ஆனி மாதம் 15ம் திகதி நடக்கவிருக்கும் இராச்சிய சபைக்கான தேர்தலில் போட்டியிடத் தெரிவாகியுள்ளார். முதல் முதலாக வெளி அரசியல் பிரவேசத்தில் காலடி பதிக்கும் கனிமொழி எதிர்காலத்தில் அமைச்சராக வருவதற்கு வாய்ப்பு அதிகம் உள்ளது என அரசியல் அவதானிகள் கருத்துக்கூறியுள்ளனர். ஒரு காலத்தில் ஜெயலலிதாவை எதிர்த்து அரசியல் நடத்துவாரா என்ற கேள்விகளும் இப்போதே எழத்தொடங்கிவிட்டன.



# இளம் பெண்களின்.... (1ம் பக்க தொடர்ச்சி)

பெண்களை மிகவும் ஒழுக்கமாகக் கட்டுப்பாடு உள்ளவர்களாக வளர்க்க வேண்டும் என்று பெரியவர்கள் சொன்னது, இந்தக் காலத்தில் அவர்களது கோர்மோன் சுரப்புகள் உச்சத்திலிருப்பதால் பாலின்ப வேட்கையும் அவர்களிடம் அதிகமாக இருக்கும் என்பதால்தான் என்பதை நாம் மனதில் கொள்ளலாம்.

இது அதிகமாக கனவு காண்கிற வயது. நாம் இந்த கனவுகளை திசை மாற்றி விட்டால் அவர்களை நல்ல வழிக்குக் கொண்டுவந்து விடலாம். சில உணவுப் பழக்கங்களை கையாளுவதன் மூலமும் கோர்மோனின் உச்சத்தைக் குறைக்கலாம். அத்துடன் பெண்களின் சூழ்நிலைகள், அவர்களது நடத்தைகள், உடனுள்ள நண்பர்கள், பார்க்கும் திரைப்படங்கள், பிற படங்கள், படிக்கும் புத்தகங்கள் போன்றவை தவறான முறையில் இருந்தால் அவர்களின் உணர்வுகளும் தவறான முறையிலேயே தூண்டப்படும். இதனால் தான் பிரச்சினைகள் உண்டாகும். இந்த சூழ்நிலைகளை மாற்றிவிட வேண்டும், நண்பர்கள் நல்லவர்களாக இருக்குமாறும், படிக்கும் புத்தகங்கள் உயர்ந்த நெறியை உண்டாக்கக் கூடியவையாக, தன்னம்பிக்கை ஊட்டக் கூடியவையாக இருக்க வேண்டும். ஆபாசத்தை சித்தரிக்கும் திரைப் படங்களையும் இளையோர்கள் பார்க்காமல் கவனித்துக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி? உயர்ந்த ஒழுக்கங்கள் என்றால் என்ன என்பதைக் கற்றுத் தர வேண்டும். யோகா, தியானம், கொழுப்புச் சத்தற்ற காய்கறி உணவுகள் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும்.

- எம் குருபரன்


கற்பகம்

மக்கள் மனங்கவர்ந்த தமிழ்க் கடை

☆ Fresh இறைச்சி எப்பொழுதும் கிடைக்கும். பெரிய இறைச்சி ஓடர்கள் செய்யும் போது சகாய விலைக் கழிவுடன் சிறு சிறு துண்டு களாகவும் வெட்டித்தரப்படும்.



☆ புதிய, பழைய சினிமாப் படங்கள் மற்றும் தொடர் நாடகங்கள் எப்பொழுதும் கிடைக்கும்



இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட மளிகைப் பொருட்கள் மற்றும் மரக்கறி வகைகள் மலிவு விலையில் பெறலாம்.

**Buy One Get One Free**

★ Basmathi Rice 5kg ★ Basmathi Rice 10kg
★ Eassy Cook 5kg

◆ நல்லெண்ணை 2 for £5
◆ மீன் வகைகள் 2 for £5 (except King fish)

புத்தாண்டை சிறப்பாக கொண்டாடிட தேவையான அனைத்துப் பொருட்களும் கிடைக்கும்

**36 Loampit Hill,**
**Lewisham, London SE13 7SW**
**Tel: 020 8694 8810**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தமாத போட்டி முடிவுகள்

## சொற்களைத் தேடுதல் போட்டி முடிவு

**போட்டியில் பரிசுபெறும் இருவர்**

1. கிஷோபன் தர்மராஜா, கரோ
2. மயூரா கிருக்ஷ்ணராஜா, ஈஸ்ட்காம்




### சரியாக விடை எழுதியனுப்பியவர்களில் இடமுள்ளவரை இடம் பெறுபவர்கள் வருமாறு

அஞ்சலா யோகநாதன், இல்பேர்ட்
அனுசா யோகநாதன், இல்பேர்ட்
ச.கஜந்தினி, ஈஸ்ட்காம்
விதுரன் சிவநாதன், வெஸ்ட் ஈலிங்
அஞ்சானா தங்கராசா, வாஸ்த்தம்ஸ்ரோ
அபிநயா ராஜன், ஈஸ்ட்காம்
நிவேதா இராதாக்கிருஸ்ணன், டகனம்
சரங்கனி சிவகுமார், விட்பிள்டன்
நிரோஷா சிவகுமார், விம்பிள்டன்
கிர்சியா சற்குணராஜா, கௌண்லோ
தாருணி புவனசிங்கம், நோபெரி
கவிதா குணசீலன், கரோ
துவாரகா தம்பையா, லூசியம்
பிரசாந்தி சுப்பிரமணியம், வூட்லி
நிலுஸ்ரா, வெம்பிளி
காருணி குலோத்துங்கன், இல்பேர்ட்
சாதனா குலோத்துங்கன், இல்பேர்ட்
நிரோஜினி பாலச்சந்திரன், சுவிஸ்ட்சலாந்து
இ.சுலக்ஷன், கொலின்டேல்
இ.சுயேந்தினி, கொலின்டேல்
ஜனனி விஜயமனோகர், கஸ்ரம் கவுஸ்
ஜெ.ஜெயதர்ஷன், ஈஸ்ட்காம்
ரஜீவினி தர்மசீலன், அபிவுட்
துசித்தாவதி மோகனறாஜா, குறொய்டன்
ஜெசிந்தா யேசுதாசன், கம்பர்வெல்
இ.தர்ஷன், கொலின்டேல்
இ.நிதுர்ஷன், கொலின்டேல்
சி.சந்தியா, கற்பேர்ட்
சீ.சஜீத், லூசியம்
சௌ.ஜீவகன், பேர்மிங்காம்
ம.பிரவீன், குறொய்டன்
கோ.கீர்த்தனன், பொரஸ்ட்கில்
நந்தினி மோகன், வாஸ்த்தம்ஸ்ரோ
மீரா சரவணபவன், சோக்-பாம்
தனுஷன் பூபாலசிங்கம், ஈஸ்ட்காம்
எஸ்.எம்.மூர்த்தி. சவுத்வுட்பேர்ட்
சாரங்கன் லோகேஸ்வரன், எட்மன்ரன்
வர்ணன் லோகேஸ்வரன், எட்மன்ரன்
பிரியங்கா மணிவண்ணன். எட்மன்ரன்
வைஷாலி, சிசிக்
சஜித் மணிவண்ணன், எட்மன்ரன்
சஞ்சை மணிவண்ணன். உட்மன்ரன்
சரிகா சாந்தக்குமார், மோடன்
நிவேதன் நிர்மலேந்திரா, கொலியஸ்வுட்
அகல்யா ரங்கராயா, கற்பேர்ட்

## குறுக்கெழுத்துப் போட்டி முடிவு

**போட்டியில் பரிசுபெறும் இருவர்**

1. பிரசாந்தி சுப்பிரமணியம், வூட்லி
2. விதுரன் சிவநாதன், வெஸ்ட் ஈலிங்



### சரியாக விடை எழுதியனுப்பியவர்களில் இடமுள்ளவரை இடம் பெறுபவர்கள் வருமாறு

அஞ்சலா யோகநாதன், இல்பேர்ட்
அனுசா யோகநாதன், இல்பேர்ட்
அக்ஷயன், இல்பேர்ட்
காருணி குலோத்துங்கன், இல்பேர்ட்
எஸ்.எம்.மூர்த்தி, சவுத் வுட்பேர்ட்
வர்ணன் லேகேஸ்வரன், எட்மன்ரன்
சாரங்கன் லோகஸ்வரன், எட்மன்ரன்
அஞ்சானா தங்கராசா, வாஸ்த்தம்ஸ்ரோ
மயூரா கிருஷ்ணராஜா, ஈஸ்ட்காம்
சாந்தினி பிரஷாந்தன், கொலியஸ்வுட்
நிவேதன் நிர்மலேந்திரா, கொலியலஸ்வுட்
கரிணி தர்மராஜா, கரோ
கிஷோபன் தர்மராஜா, கரோ
ம.பிரவீன், குறோய்டன்
சரங்கனி சிவகுமார், விட்பிள்டன்
நிரோஷா சிவகுமார், விம்பிள்டன்
சௌ.ஜீவகன், பேர்மிங்காம்
சீ.சஜீத், லூசியம்
சி.சந்தியா, கற்பேர்ட்
கோ.கீர்த்தனன், பொரஸ்ட்கில்

**கேள்வி 13. வலமிருந்து இடம்**
**இதற்கான பதில் “துலா”, “வாளி” என்பதும் சரியான பதிலாக கொள்ளப்பட்டுள்ளது.**


**தமிழில் சாரதிகளின் எழுத்துப் பரீட்சை வகுப்புகள்**
**Theory Test Classes in Lewisham**



- Theory Test மற்றும் Hazard Perception Test ஆகியவை இலகுவான முறையில் தமிழில் விளக்கப்பட்டு, கணனிமூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.
- தனி வகுப்புகள், கூட்டுவகுப்புகள் ஒழுங்கு செய்யலாம்.
- பரீட்சைகளுக்கும் ஒழுங்குசெய்து தரப்படும்

தொடர்புகளுக்கு: வேந்தன் 07749 051 394


# சதுக்கத்தில் ஒரு புதுச்சிலை

உயரமோ 9 அடி (2.7 செ.மீ ). செம்பினால் வார்க்கப்பட்டது. இதற்கான செலவு 400,000 பவுண்ட்ஸ். தென் ஆபிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மன்டேலாவிற்காக இங்கிலாந்தில் வார்க்கப்பட்ட சிலை பற்றித்தான் சொல்ல வருகின்றோம். முன்னாள் தென் ஆபிரிக்க அதிபரின் சிலையை, ரபெல்கார் சதுக்கத்தில் நிறுவுவது பற்றி 5 வருடங்களாக நீடித்த சர்ச்சை, ஒரு முடிவுக்கு வந்துள்ளது. வெஸ்ட்மினிஸ்டர் நகரசபை இதற்கான அனுமதியை வழங்கியமையிட்டு இலண்டன் நகரபிதா தன் வரவேற்பை வெளிப்படுத்தியுள்ளார். நீண்டகால பிரச்சாரங்களின் முடிவில் இது தமக்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்று நகரபிதா திரு.கென் லிவ்விங்ஸ்ரன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். ரபெல்கார் சதுக்கத்தில் இச் சிலையை நிறுவ முடியாதென்று ஆரம்பம்



தொடக்கம் கவுன்சில், தன் எதிர்ப்பைக் காட்டி வந்திருந்தது. ஏற்கனவே இங்கு நிறுவப் பட்டுள்ள சிலைகளுள், வின்சன்ட் சேர்ச்சில், ஆபிரகாம் லிங்கன் போன்ற சிலரது சிலைகளையும் குறிப்பிடலாம்.

# களவாடப்படும் கைத்தொலைபேசிகள்

களவும் கற்று மற என்று சொல்லி வைத்ததால்தான், பலரும் களவையும் நாடி வருகின்றார்களோ? என்ன காரணமோ தெரியவில்லை. இங்கிலாந்து, வேல்ஸ் ஆகிய இடங்களில் கடந்த வருடம் 800,000 பேரின் கைத் தொலைபேசிகள் களவு போயிருக்கின்றன என்று அரசு, ஒரு புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது. பிள்ளைகளும், இளவயதினரும்தான் இந்தக் களவில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் என்ற விபரத்தையும் இந்த அறிக்கையில் காணமுடிகின்றது. பத்துப் பேருடைய களவை நோக்கினால், அதில் ஏழுபேர் தமது கைத்தொலைபேசிகளை அஜாக்கிரதை காரணமாக இழந்துள்ளார்கள் என்றும் தெரியவந்துள்ளது. 12 தொடக்கம் 15 வயதிலானவர்களே அதிகம் பாதிக்கப் பட்டுள்ளார்கள். உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு கைத்தொலைபேசிகள் விடயத்தில், இப்பொழுதுதான் முதற் தடவையாக, இப்படியொரு விபரத்தைத் தருகின்றது. இந்தத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் இதுபற்றிக் குறிப்பிடுகையில், கடந்த 10 வருடங்களில் குற்றச் செயல்கள் 35 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ள தோடு, தினசரி மனித வாழ்வில் கைத்தொலைபேசிகள் ஓர் அங்கமாகி விட்டன. களவுப் பொருள் எந்த வழியிலும் திருடர்களுக்குப் பயன்படாத வகையில், கைத்தொலைபேசிகளை நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் வழிகள் தேடப்பட்டு



வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார். அரசு உரிய நடவடிக்கைகளில் இறங்கி யிருக்கின்றது என்று திருப்திப்பட்டுக் கொள்ளும் அதே நேரத்தில், நிழல் உள்நாட்டமைச்சர் திரு டேவிட் டேவிஸ் அரசின் திருப்தி தேவையற்றது என்று குறைப்பட்டுள்ளார். இள வயதினரிடையே காணப்படும் பெரிய அளவிலான திருட்டுகளை இந்தப் புள்ளி விபரங்கள் வெளிப்படுத்துகின்றன என்று கூறும் இவர், பிரச்சினைகள் முளைவிட்டிருப்பதும், எதிர்காலத்தில் பிரச்சினைகள் வெடிக்கப் போகின்றன என்பதும் தெரிகின்றது. இந்த விடயத்தில் அரசு திருப்திப்பட்டுக் கொள்வது அதிர்ச்சியைத் தருகின்றது என்று சாடியிருக்கின்றார்.


**WALKATHORN 2007**

**24TH June 2007**
**11am to 2pm**
**Tooting Bec Common (Opposite to Tooting Athletic car park)**
**Meeting Point at Dr. Johnson Avenue Carpark**
**Entry Fee is £3.00 with Sponsorship or £5 without**

**Contact: 020 8672 4100**
**White Pigeon UK**
**175 Tooting High Street**
**London SW17 0SZ**


# புதிய மன்னர்

புதிய மன்னரின் பதவியேற்பு வைபத்தை, மலேசியாவின் கோலாலம்பூர் நகர் கண்டுள்ளது. தலைநகரில் உள்ள ஆடம்பர மாளிகையில், மலேசியாவின் 13வது மன்னர் அண்மையில் முடிசூடப்பட்டுள்ளார். முன்பு



மன்னராக இருந்த ரூனக்கு சயித் சராயுதீன் என்பரின் 5 வருட கால ஆட்சி, முடிவுக்கு வந்தமை காரணமாக, பதிய மன்னராக சுல்த்தான் சயினல் அப்டீன் என்பவர் அடுத்த 5 வருட ஆட்சிக்குத் தெரிவாகியுள்ளார். இவர் வயது 45. மலேசிய அரசியலமைப்பின்படி, ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை, புதிய மன்னர் பதவியேற்பது வழைமயிலுள்ளது. இங்குள்ள 9 மாவட்டங்களின் அதிபர்கள், சுழற்சி முறையில், ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மன்னராகப் பதவியேற்று வருகின்றார்கள். சுழற்சி முறை மன்னர் ஆட்சியைக் கடைப்பிடித்து வரும் ஒரேயோரு உலக நாடு மலேசியாதான். மனனர் இங்கு ஆட்சியிலிருந்தாலும், பாராளமன்றத்திற்கும், பிரதமருக்குந்தான் அதிகாரபூர்வமான பல முக்கிய முடிவுகளை எடுக்க முடியும். இளம் வயதில் முதற் தடவையாக மன்னராகி யிருக்கும் சுல்தான், பல அதிரடி மாற்றங்களை அறிமுகப்படுத்தவுள்ளார் என்று அறியப் படுகின்றது. வைபவங்களைப் பெரிதும் வரவேற்காத இந்தப் புதிய சுல்தான், அதீத விளையாட்டுப் பிரியர். குதிரையேற்றத்திலும், Golf விளையாட்டிலும் இவருக்கு நல்ல தேர்ச்சியுண்டு என்கிறது மன்னர் வட்டாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை இயேசுவைக் கொல்ல முயன்ற ஏரோது மன்னனின் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது!


யூதேயா நாட்டை ஆண்ட ஏரோது மன்னனின் ஞாபகச் சின்னக் கல்லறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என இஸ்ரேலிய தொல்பொருள் ஆய்வாளர் கூறியுள்ளனர்.

இந்த மன்னன்தான் குழந்தை இயேசுவை அழிக்க வேண்டுமென்பதற்காக பெத்தலகேம் என்னும் நகரிலுள்ள 2 வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகள் அனைவரையும் கொலை செய்யுமாறு கட்டளையிட்டவன் என்று விவிலிய நூலில் கூறப்பட்டுள்ளது.

யேசுவின் பிறப்பை வானசாஸ்திரர்கள் மன்னர் ஒருவர் பிறந்துள்ளார் என்று கூறியதைத் தொடர்ந்து, தனக்கு எதிராக வேறொரு மன்னன் வந்துவிடுவானோ என்ற பயத்திலேயே ஏரோது மன்னன் அவ்வாறு குழந்தைகளைக் கொல்லுவதற்கு கட்டளையிட்டான் என்ற சொல்லப்படுகிறது. கி.மு 37ல் உரோமர்களால் ஆட்சியில் அமர்த்தப்பட்ட இவன் 41 ஆண்டுகள் அதாவது அவன் இறக்கும்வரை யூதேயா தேசத்து மன்னனாக இருந்தான்.

இவன் பாலகன் இயேசுவைக் கொல்ல எத்தனிப்பான் என்பதை முன்கூட்டியே அறியப்பெற்ற யேசுவின் தந்தை சூசை குழந்தையுடனும் மனைவியுடனும் எகிப்து நாடு சென்று விட்டார்.

இஸ்ரேலிய தொல்பொருள் ஆய்வாளரான பேராசிரியர் நெற்சரின் 30 ஆண்டு முயற்சியின் விளைவாக அவர் தலைமையிலான குழு இந்த நினைவுச் சின்னக் கல்லறையை அடையாளம் கண்டுள்ளார்கள். அங்கு மன்னனின் இறுதிச் சடங்கிற்காகப் பிரத்தியேகமாகக் கட்டப்பட்ட படிக்



கட்டுக்களும், உடைக்கப்பட்ட நிலையில் பூ வேலைப்பாடுகளுடன் கூடிய எட்டடி நீளம்கொண்ட சவப் பெட்டியும் அடங்குகிறது. ஆனால் எலும்புகள் காணப்படவில்லை. இவை கி.பி 60-ம் ஆண்டுகாலப்பகுதியில் உரோமர்களுக்கு எதிராக கிளர்ந்த கிளர்ச்சியாளர்களால் எடுத்துச் செல்லப் பட்டிருக்க வேண்டும் என்று நம்புகிறார்கள். இந்த ஆய்வு உறுதியாக்கப் படும் பட்சத்தில் இது ஒரு முக்கிய தொல்பொருள் கண்டுபிடிப்பாக அமையும்.

# நீரைத் திரவ நிலையில் வைத்திருக்கக் கூடிய புதிய கோள் ஒன்று அவதானிக்கப்பட்டுள்ளது

20.5 ஒளி ஆண்டுகள் தொலைவில் புதிய கோள் ஒன்று அவதானிக்கப் பட்டுள்ளது. எம் சூரிய மண்டலத்தின் மற்றைய ஏழு கோள்களுக்கும் இல்லாத தனிச் சிறப்பு இதற்கு உண்டு. இதுவரை காலமும் பூமியில் மட்டும்தான் நீரை அதன் நீர்ம அல்லது பாய்ம நிலையில் வைத்திருக்கக் கூடிய வெப்பம் அவதானிக்கப் பட்டது. இப்போது, முதல் முறையாக பூமி தவிர்த்து வேறொரு கோளில் இவவாறான உகந்த சூழல் அவதானிக்கப் பட்டுள்ளது. கிளைஸ் என்னும் ஒரு சிறிய விண்மீனை இது சுற்றிவந்தாலும் அது அந்த விண்மீனுக்கு அண்மையில் உள்ளதால் வெப்ப நிலை, பூமிக்கு ஒப்ப எப்படியோ அமைந்து விட்டது. பூமியைப்போல் ஒன்றரை மடங்கு பெரிதாகவும் எடையில் 5 மடங்கு கூடியதாகவும் இக்கோள் இருக்கின்றது. இருந்தாலும் கடந்த 12 ஆண்டுகளுள் அவதானிக்கப் பட்ட 200 வரையான கோள்களுள் இதுவே ஆகச் சிறியது. அங்கு நீர் இருக்குமானால் ஆறுகளையும், ஏரிகளையும் சமுத்திரங்களையும் எதிர் பார்க்கலாம்தானே. ஆனால் இதுவரை நீர் அங்கு உள்ளதற்கு ஆதாரமான தரவுகள் எதுவுமே பெறப்படவில்லை.


**தமிழ் தட்டச்சு சேவை**

**Tamil Typing Service**



தமிழ் ரைப்பிங் செய்யவேண்டுமா?

- ☆ எல்லாவிதமான தேவைகளுக்கும் Typing செய்துகொடுக்கப்படுகின்றது
- ☆ 1 பக்கம் என்றாலும் 100 பக்கங்கள் என்றாலும் தயக்கமின்றி விரைவாக செய்து தரப்படும்.
- ☆ 24 மணி நேரத்தினுள் செய்து தரப்படவேண்டிய துரித வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
- ☆ செய்யப்பட்ட வேலைகள் Printed paper/Email/CD /Floppy discs போன்ற முறைகளில் வழங்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு: நிர்மலா 07845 063 501, ரஜிதா: 07999 144 380


## திருமண... (8ம் பக்க தொடர்ச்சி)

வாழ்த்து
கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனம் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானம்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும்
ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி காடவூரின் வாழ்வே
அதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி
வாழ்க அறவோர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன்நாமமே
சூழ்க வையகம் தீர்கவே!

(விழா ஆசிரிருக்கு ஒரு தட்டில் தேங்காய், பழம், வெற்றிலைப் பாக்கு, வைத்து காணிக்கை, பயணச் செலவு, வேட்டி துண்டுகொடுத்து அவரிடம் ஆசி பெறுக.)

யாவும் நலமாகி வையம் சிறக்க!

முற்றும்.

வாசகர்கள் கருத்துக்களை வரவேற்கிறோம்

நன்றி: மணிவாசகர் அருட்பணி மன்றம் பேரூர்செட்டிப்பாளையம், கோவை.


# IT Seekers

Bringing IT to your Door Step



- ❖ PC Repair/Upgrading
- ❖ Wired/ Wireless Networking Setup
- ❖ IT Consultancy

Do you want to Utilize your free space at your shop,

You can have Internet Café at your business…

Contact us for free Consultancy and Quotation!

**All the work undertaken by qualified, experienced Engineers**

**For all your IT need call**

**Praba 07985218798**

**(Please call weekends at any time and 4-6pm in week-days)**

**e-mail : praba@itseekers.net**

**கணனி சம்பந்தமான சகல ஆலோசனைகள் மற்றும் திருத்த வேலைகள் அனைத்தும் குறைந்த கட்டணத்தில் நிறைவாகச் செய்து தரப்படும். Internet Cafe தொடங்குவதற்கான சகல ஆயத்தங்களும் செய்து தருவதுடன் தொடர்ச்சியான பராமரிப்பு சேவையும் வழங்கப்படும்.**



## AS Kugann Photography

*A reson to smile*

*Digital Now!*



- ❖ Wedding
- ❖ Engagement
- ❖ Coming of age ceremony
- ❖ Arangetram
- ❖ Birthday
- ❖ Commercial & Advertising
- ❖ *for all occasions...*

**07899 811 402**

**www.askugann.com,**

**askugannphotography@gmail.com**



**வெண்புறாவின் சிறுவர்களுக்கான தடகள மெய்வல்லுனர் போட்டி**

**07 July 2007 Saturday**
**9.30 am - 7.00 pm**
**Tooting Bec Athletics Track**
**Tooting Bec Road**
**SW17 1RU**

விண்ணப்ப பத்திரத்தை பெறுவதற்கு
தொடர்பு கொள்ளவேண்டிய எண் 020 8672 4100
Email: whitepigeon@btconnect.com
விண்ணப்ப முடிவு நாள்: 01/07/07


# புங்குடுதீவில் கண்டெடுக்கப்பட்ட சடலம் காணாமல்போன கத்தோலிக்க மதகுருவினுடையது

கடந்த மார்ச் மாதம் 14 ஆம் நாள் புங்குடுதீவில் உள்ள கடற் கரைப்குதியில் இராணுவச் சாக்கு ஒன்றிற்குள் கண்டெடுக்கப்பட்ட உடற்பகுதிகள் காணாமல் போன கிறிஸ்தவ மதகுருவான வண. ஜிம் பிறவுண் அடிகளினுடையது என மரபணு சோதனைகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இத்தகவல் கடந்த வைகாசி மாதம் 31ம் திகதி மகரகம மருத்துவனையின் உத்தியோக பூர்வமற்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக தமிழ்நெட் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. கண்டெடுக்கப்பட்ட சடலத்தின் பகுதிகளும், ஜிம் பிறவுண் அடிகளாரினது பெற்றோரின் குருதி மாதிரிகளையும் தாம் பெற்றுள்ளதாகவும் விரைவில் மரபணு சோதனை நடத்தப்படும் எனவும் மருத்துவமனையின் சட்டபூவமான அதிகாரி ஒருவர் முன்னர் தெரிவித் திருந்தார். எனினும் தமது முடிவுகளை மருத்துவமனை வட்டாரங்கள் ஊர்காவற்துறை நீதிமன்றத்திற்கு அறிவித்த பின்னர் இது தொடர்பான உத்தியோகபூர்வமான தகவல்கள் வெளிவரும் என யாழ்ப்பாணத்தின் உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அல்லைப் பிட்டி தேவாலயத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய அருட்தந்தை திருச்செல்வம் நிகால் ஜிம் பிறவுண் (வயது 34), அவரது உதவியாளரான வென்சீஸ்லஸ் வின்சன்ற்



விமலன் (வயது 38) ஆகியோர் கடந்த வருடம் ஆவணி மாதம் 20 ஆம் நாள் மண்டைதீவில் உள்ள இராணுவத்தின் சோதனைச் சாவடியில் நடைபெற்ற விசாரணைகளின் பின்னர் காணாமல் போயிருந்தனர்.இவர்கள், காணமல் போனது தொடர்பான தகவல்களை படைத்தரப்பு வெளியிட வேண்டும் என கோரி யாழ். மக்களாலும், கிறிஸ்தவ மத குருக்களினாலும் பல எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டிருந்தன. மேலும் இது தொடர்பாக பாப்பரசரின் சிறப்பு பிரதிநிதி யாழ். குடாநாட்டுக்கு பயணம் செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EELAM SHOP
## ஈழம் கடை

இலங்கை, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள், கடலுணவு வகைகள், பத்திரிகைகள் சஞ்சிகைகள் போன்ற அனைத்துப் பொருட் களையும் மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்



**399 Lewisham High Street**
**London**
**SE13 6NZ**
**Tel: 020 8690 6545**

# EVEREST CURRY KING

**சுத்தம், சுவை, தரம்**

இவைகளுக்கு மறுபெயர் எவரெஸ்ட்...

நண்டு, இறால், கணவாய், சுறா, மீன், நெத்தலி போன்ற கடல் உணவுகளை பல சுவையில் சுவைத்து மகிழ்ந்திட..



**24 Loampit Vale**
**Lewisham**
**Tel : 020 8691 2233**

# Diamonds Palace

மங்கையர்க்கு எழில் சேர்க்க ...
புதுப் பொழிவு நிதம்பரவ ...
பொன்னகைக்கு மறுபெயர்தான்
வைரமாளிகை

மண்ணுலகில் மயன் படைத்தான்
வைரமாளிகை
ஆமாம்.. செல்லும் இடமெல்லாம்
இதே பேச்சு



76 Tooting High Street
London SW17 0RN
Tel: 020 8767 5333
Fax: 020 8767 5814

# BIRAVENAAS

**South Indian & Sri Lankan Restaurant and Bar**

**Open Daily**
Monday –Thursday
12.pm to 11.30pm
Friday to Sunday
12pm -01am



**FREE DELIVERY***

**Lunch Buffet £5.95**
**12.30 – 3.30**

1, Sandhurst Market Sandhurst Road
Catford, London SE6 1DL
**Tel: 020 8695 8625**
*Orders over £12 with in 3 miles 6-10pm



**JK GOLD &**
**FASHION HOUSE**
314-316 London
Road
West Croydon
Surrey CR0 2TJ
Tel:020 8684 4577

# JK
# GOLD & Fashion House

ஆடை ஆபரணம் வாங்க ஆசை பூர்த்தியாக நீங்கள் என்றும் நாட வேண்டிய ஒரே இடம் -

☆ நயமான சுத்த
தங்கத்துக்கும் சரி

☆ திருமண
பட்டென்றாலும் சரி

☆ சிறுவர்களுக்கான
ஆடைகளானாலும் சரி



கற்பனையை பூர்த்தி செய்வது
JK தான்

**Tel: 020 8684 4577**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org